Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-67 ஆவணி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00



# மர்மம் விலகாது கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகள்

- எளிமையான வீட்டுத்தோட்டம்
- மலையகம் 200 அடுத்து என்ன?
- எமது சேமிப்பை அபகரிக்கும் அரசு

ஆய்வு–அறிவு–நிமிர்வு

# எளிமையான வீட்டுத்தோட்டம்

தமிழ்நாட்டு சூழலியலாளர், இயற்கை விவசாய விஞ்ஞானி ரேவதி



தொகுப்பு - அமுது

காலநிலை மாற்றங்கள், பணவீக்க உயர்வுகள், நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் நாளாந்தம் சந்தைகளில் பெரும் ஏற்ற இறக்கங்களில் மரக்கறி வகைகள் விற்கப்படுகின்றன. எமது பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளிலும் சிறுதுண்டு நிலத்திலாவது மரக்கறி பயிர்ச்செய்கை செய்ய முடியும். இதற்கு வழி காட்டுகிறார் தமிழ்நாட்டு சூழலியலாளரும் இயற்கை விவசாய விஞ்ஞானியுமான ரேவதி.

வீட்டுத்தோட்ட செய்கை தொடர்பில் விவசாய திணைக்கள தொலைக்காட்சி பண்ணை ஒலிபரப்பு சேவையின் நேரலைக்கு கடந்த 14.07.2023 அன்று ரேவதி அவர்கள் வழங்கிய பதிவில் இருந்து முக்கிய பகுதிகளை இங்கே தருகிறோம்.

ஐந்து விடயங்களை ஒருங்கிணைத்தால் ஒரு தற்சார்பான நிரந்தரமான வீட்டுத்தோட்ட செய்கை வேளாண்மைக்கு நாங்கள் போக முடியும். நாங்கள் இந்த முயற்சிகளை செய்யும் போது கிழக்கு மாகாணத்தில் இராஜகுலசிங்கம் என்று ஒரு விவசாயியுடன் ஒரு அனுபவம் ஏற்பட்டது. அவர் மிளகாய் செடிகளை பயிர் செய்திருந்தார். அது அறுவடை முடியப் போகின்ற காலமாக இருந்தது. ஒரு 5,6 மாதம் அவர் காய்கள் எல்லாம் பறித்து விட்டார். இப்பொழுது அது முடியப் போகின்ற நேரத்தில் அவர் எங்களுடைய ஆலோசனைகளை கேட்டு சில வழிமுறைகளை மேற்கொண்டார். நிலப் போர்வை தொடர்பாக நாங்கள் ஒரு திட்டத்தை சொன்னோம். அத்தோடு சில இயற்கையான பயிர் ஊக்கி மருந்துகளை தயார் செய்து தெளிப்பதற்கும் அவருக்கு சொல்லி கொடுத்தோம். மேலும் 18 மாதங்கள் அந்த மிளகாய் செடி தொடர்ந்து காய்த்துக் கொண்டே இருந்தது.

இதில் தினமும் எவ்வளவு பறிக்கிறார், எவ்வளவு சந்தைக்கு கொண்டு செல்கிறார், எவ்வளவு பணம் கிடைக்கிறது என எல்லாவற்றையுமே முழுமையாக ஆவணப்படுத்தி இருந்தோம். இதே போல ஆயிரக்கணக்கான பேரை ஆவணப்படுத்தி இருந்ததில் எங்களுக்கு இலங்கையினுடைய மண் மிகவும் வளமான மண் என்று தெரிந்தது. அதில் உயிரோட்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆனால் கடந்த பல வருடங்களாக இயற்கை கழிவுகளை நிலத்திற்கு கொண்டு செல்ல தவறியதாலும் அதிகமான இரசாயன பயன்பாடு மற்றும் களை கொல்லிகளினுடைய பயன்பாடு என்பவற்றாலும் அந்த நிலங்கள் வளம் குன்றி விட்டன. அந்த நிலத்தில் தொடர்ந்து ஒரே பயிரை பயிரிடுவதன் காரணமாகவும் நிலவளம் இழக்கப்பட்டுள்ளது.

விளைச்சலுக்கும் அதற்கு நாங்கள் செல வழிப்பதற்கும் இடையேயான விகிதம் சரியாக இல்லை. இதனால் விவசாய வேளாண்மை பல சந்தர்ப்பங்களில் இலாபகரமானதாக இருக்க வில்லை. ஒரு சுமையாக இருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்.

வீட்டுத்தோட்ட செய்கையில் நாங்கள் அடிப்படையாக சொல்கின்ற விடயம் தனியாக ஒரு பயிரை பயிரிடாதீர்கள் என்பது. அதே போன்று ஒரே குடும்பத்தை சேர்ந்த பயிர்களை பயிரிடக் கூடாது. உதாரணமாக கத்தரி, தக்காளி, மிள காய் என்பன ஒரே குடும்பத்தை சேர்ந்தவை. இதனால் இவற்றுக்கு வருகின்ற பூச்சிகளும் நோய்களும் பொதுவானதாக இருக்கின்றன. இவற்றை பயிரிடும் போது இவற்றுக்கிடையில் நீண்ட இடைவெளி ஒன்றை உருவாக்கி அதில் பயறு வகைகளை பயிரிட வேண்டும். இவற்றின் வேர் முடிச்சுகளில் ரைசோபியம் இருப்பதனால் நைதரசனை நிலத்தில் சேர்க்க கூடிய உர செடியாக இருக்கிறது. இயற்கையாகவே நாங் கள் யூரியா போடுவதை போல இது நடக்கி றது. இவ்வாறாக கலப்பு பயிர்களை பயிரிட வேண்டும்.

பயிர் செய்கிற இடத்தினை மேட்டு பாத்தி அமைப்பது என்கிறோம். தரையோடு தரையாக செய்யும் போது கொஞ்சம் மழை பெய்தால் கூட அழுகி போகின்றன. நீர்ப்பாசனம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வடிகால் வசதி. இந்த பதப்படுத்தப்பட்ட படுக்கையில் நாங்கள் கால் வைத்து நடக்க கூடாது. அது மண்புழுக்களும் நுண்ணுயிர்களும் தூங்குவ தற்கான ஒரு படுக்கை. “நடக்கிற இடத்தில் விதைக்காதே, விதைக்கிற இடத்தில் நடக் காதே” இது ஒரு முக்கியமான ஒரு குறிக்கோ ளாக இருக்கிறது. பாத்தி எல்லாம் வடிவ மைத்து விட்டு அதில் முக்கியமாக நாங்கள் செய்கின்ற வேலை நிலப்போர்வை. அதாவது நிலம் எனும் தாய் ஒரு பெண்ணாக இருப்பத னால் எப்போதுமே பசுமையான ஆடையோடு இருப்பதற்கு தான் விரும்பும். நிலத்தை பொலித் தீனாலோ, தகரத்தாலோ மூடி வைத்தால் அது பிளாஸ்டிக் கழிவுகளை நிலத்திற்கு கொண்டு வரும். ஒவ்வொரு காலம் முடிந்தவுடனும் அதனை தூக்கி எறிய வேண்டும். அதனை எங்கு போடுவது? ஆகவே தான் நாங்கள்

**நிலம் எனும் தாய் ஒரு பெண்ணாக இருப்பதனால் எப்போதுமே பசுமையான ஆடையோடு இருப்பதற்கு தான் விரும்பும்**

உயிர்த்தெழும் பூமி எனும் முறையில் உயிர் நிலப்போர்வையை பயன்படுத்துகிறோம்.

உதாரணத்திற்கு கத்தரியோ வெண் டியோ வேறு காய்கறிகளோ பயிரிட போகி றோம் என்றால் அந்த படுக்கை மேல் கொஞ் சம் கொள்ளு, தட்டைப்பயிர், உளுந்து, பச்சைபயறு போன்ற நைதரசனை சேர்க்க கூடிய வேர்முடிச்சு கொண்ட உயரமாக வள ராத தரையோடு தரையாக செல்லக் கூடிய தாவரங்களை முதலில் நெருக்கமாக வளர்க்க வேண்டும். அது ஒரு 15-20 நாள் வளர்ந்ததன் பிறகு கத்தரி, தக்காளி எல்லாவற்றையும் சரி யான இடைவெளிகளில் கலந்து வைத்து விடு வோம். ஏற்கனவே நான் சொன்னது போல பல பயிர் சாகுபடி செய்யும் பொழுது, கத்தரிக்கு பக்கத்தில் கத்தரியோ தக்காளியோ வராமல் அதற்கு பதிலாக ஒரு அவரையோ, வெண்டியோ அல்லது உளுந்தோ, பயறோ என மாற்றி வைக்க வேண்டும். இதனால் பூச்சிகள் பரவுவதை நாங்கள் முதல் கட்டத்திலேயே தடுத்து விடுகிறோம். அதேவேளை, இந்த நிலப்போர்வை ஈரத்தை நன்றாக காக்கும். ஒரே ஒரு தடவை இந்த படுக்கையை செய்து விட்டால் போதும் திரும்ப திரும்ப செய்ய தேவையில்லை. தண்ணீர் வடிந்து போவதற்கும் வாய்ப்பாக இருக்கும். ஒவ்வொரு பருவத்தி லும் விளைகாலம் முடிந்ததன் பிறகு கழிவு களை எடுத்து அந்த படுக்கையின் மேலே போட்டுவிட்டால் அவை நிலத்திலிருந்து எடுத்த சத்துக்களை திருப்பி கொடுக்கும்.

இதில் குறிப்பாக பூச்சி கட்டுப்பாடு செய்வதற்காக நாங்கள் உயிர்வேலிகளை பயன் படுத்துகிறோம். நன்மை செய்யும் பூச்சிகள் என்று சொல்லக்கூடிய அசைவ பூச்சிகள் வந்து அமரக் கூடிய அவை விரும்பக் கூடிய தாவரங்களை உயிர்வேலியில் நடுகிறோம்.

(12 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## மீண்டும் இரத்த ஆறை ஓடச் செய்வதற்கான சகல ஏதுநிலைகளையும் உருவாக்கும் சிறீலங்கா அரசு

மீண்டும் இலங்கையில் இரத்த ஆறை ஓடச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் பௌத்த பிக்குகளும், சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் செய்ய தொடங்கி விட்டனர். வடக்கு கிழக்கு மட்டு மல்ல மலையகம், கொழும்பு என எல்லா இடங்களிலும் ஆக்கிரமிப்புகளும், இனவாதத்தை தூண்டும் பேச்சுகளும் சர்வ சாதாரணமாகி விட்டன.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாகிய நீதித்துறையின் நீதிபதியையே மனநோயாளி என சிங்கள பௌத்த இனவாதி சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் கூறுகிறார். குருந்தூர் மலை விவகாரத்தால் மீண்டும் இனக்கலவரங்கள் மூளலாம் என இந்திய புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

பௌத்த மேலாதிக்க சிந்தனையை மீண்டும் உச்ச அளவில் பயன்படுத்தி தமிழர் தாயகத்து நிலங்கள் கபடத்தனமாக அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஓர் இனத்தின் நிலத்தைப் பறித்தால் அவ்வினத்தை தாங்கி நிற்கும் தூண்களில் ஒன்றை அழிப்பதாக முடியும். மேலும், வாழ்வாதாரத்திற்காக அந்நிலத்தில் தங்கியிருக்கும் அந்த இனத்தின் பொருளாதாரத்தை அழிப்பதாக முடியும். அதனைத்தான் விகாரைகளை சுற்றியுள்ள விளைநிலங்களை பெருமளவாக அபகரிப்பதன் மூலம் சிங்கள பௌத்தம் செய்ய நினைக்கிறது. மயிலத்தமடு போன்ற மேய்ச்சல் நிலங்களை அபகரிப்பதன் மூலம் சிங்கள பௌத்தம் செய்ய நினைக்கிறது.

கழுத்தை நெரிக்கும் கடன் சுமை இருக்கும் வேளையில் சிங்கள பௌத்த அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு பின்னால் உள்ள சதியை நாம் மிகவும் கவனமாக ஆராய வேண்டும். சர்வதேச நாணய நிதியம் விதித்த இலக்குகளை அரசாங்கம் அடைய முடியாமல் தோல்வியுற்றுள்ளது. அதனால் மேலும் சுமைகளை சாதாரண மக்கள் மீது சுமத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. உழைக்கும் மக்கள் எதிர்காலத்திற்கென சேமித்து வைத்த ஓய்வூதியத்தில் கை வைத்தது போதாமல் அவர்களின் அன்றாட வருமானத்தில் கை வைக்க வேண்டிய தேவைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இது பரந்துபட்ட மக்களின் எதிர்ப்பை தோற்றுவிக்கும். அரசு கவிழும் நிலைக்கு தள்ளப்படும். ஆகவே வெளிநாடுகளிலிருந்து கடன் பெறும் வழிகளை விரைவாக திறக்க வேண்டிய அவசியம் சிங்கள பௌத்த அரசுக்கு உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பணத்தை கடன் பெறுவதற்கான வழிகளை திறக்க வேண்டுமாயின் IMF வைத்துள்ள இலக்குகளை அடைய வேண்டும். அல்லது வேறு வழிகளில் வெளிநாடுகளிலிருந்து கடனை பெறவேண்டும். அதற்கு இலகுவான ஒரு வழி இந்த நாட்டில் ஒரு யுத்தத்தை ஏற்படுத்துவது. அந்த யுத்தத்தை பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என காட்டி மேற்குலக நாடுகளிடம் கடன் வாங்குவது. தமது ஆயுதங்களை விற்பதற்காக மேற்குலகமும் சிறிலங்காவுக்கு கடன் கொடுக்க தயங்காது. அதேவேளை அந்த கடன்களுக்கு அதிக வட்டி விகிதத்தையும் அவர்கள் அறவிட முடியும்.

ஒரு உள்நாட்டு யுத்தத்தை தோற்றுவிப்பதன் மூலம் மேற்குலகிலிருந்து கடன் பெற முடியும். எஞ்சியிருக்கும் தமிழ் மக்களையும் இன்னொரு இனவழிப்பின் ஊடாக கொன்று ஒழித்து விட முடியும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள். ஆகவே இந்த அரசுக்கு ஓர் உள்நாட்டு யுத்தம் அவசரமாக அவசியமாக தேவைப்படுகிறது. அதற்கான ஊக்குவிப்புகளே இன்று நாம் காணும் பிக்குகளின் நடவடிக்கைகளும் அவர்களுக்கு சிங்கள பௌத்த அரசு கொடுக்கும் ஆதரவுகளும்.

இதனை தெளிவாக புரிந்து கொண்டு நடக்க வேண்டியது தமிழ் மக்களினதும் அவர்களது அரசியல் தலைமைகளினதும் பொறுப்பாகும். நில அபகரிப்புகளுக்கும் பொருளாதார பறிப்புகளுக்கும் எதிரான போராட்டங்கள் ஜனநாயக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஒருங்கிணைக்கப்பட வேண்டும். பலப் படுத்தப்பட வேண்டும். அதற்கு பின்னால் எமது இனத்தை மேலும் அழியாமல் பாதுகாக்கும் கோட்பாடு முக்கியமானதாக இருக்க வேண்டும்.

-செ. கிரிசாந்-

# மர்மம் விலகாத கொக்குத்தொடுவாய் மனிதப் புதைக்குழிகள்




நிதியை வழங்க பின்னடிக்கிறதா அரசு?

**முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பிலான வழக்கு விசாரணைகள் கடந்த 17.08.2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, குறித்த அகழ்வுப் பணிகளை 6 வாரங்களுக்கு மேற்கொள்ள 1.2 மில்லியன் ரூபாய்கள் தேவையென சுட்டிக் காட்டப்பட்டது. குறித்த அகழ்வுக்கான நிதிகள் எவையும் மாவட்ட செயலகத்திற்கு இதுவரை கிடைக்காததால் ஏற்கனவே திட்டமிட்டபடி கடந்த 21 ஆம் திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியாதென்றும், இப் பணிகளை வரும் மழைக்காலத்துக்கு முன் அவசரமாக செய்ய வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட சகல அரச திணைக்களங்களின் அதிகாரிகளையும் மன்றுக்கு அழைத்து உறுதியான தீர்மானமெடுத்து இப்பணியை விரைவு படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் குறித்த வழக்கோடு சம்பந்தப்பட்ட சகலரையும் 31.08.2023 நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை வழங்கப்பட்டு தவணையிடப்பட்டது.**

(முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த புதைகுழி தொடர்பில் நிமிர்வு காணொளி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து முக்கிய பகுதிகள் வருமாறு)

கொக்குத்தொடுவாயில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மக்களுக்கான நீர் வழங்கல் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு அதற்கான குழாய் பொருத்துதலில் ஈடுபட்டிருந்தனர். அதற்காக நிலத்தை தோண்டும் பொழுது, கடந்த ஆனி மாதம் 29 ஆம் திகதி ஒரு மனிதப் புதைக்குழி கண்டுபிடிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தங்களுடைய கடமையாக அதனை உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர். இது தொடர்பாக எனக்கு மக்கள் அறிவித்ததையிட்டு நானும் அங்கு சென்று பார்வையிட்டேன். பிறகு 30 ஆம் திகதி நீதிபதி அங்கே வருகை தந்தார். அவரும் பார்வையிட்டு ஆடி மாதம் 6 ஆம் திகதி அந்த புதைக்குழியை அகழ்வதற்கான அறிவித்தலை வெளியிட்டனர். 6 ஆம் திகதி நாங்களும் அங்கே போயிருந்தோம். அங்கு நடைபெறுவனவற்றை பார்த்த பொழுது எங்களுக்கு சந்தேகம் ஒன்று ஏற்பட்டது. ஏற்கனவே 33 மனிதப் புதைக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலமாக அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் ஒன்றுக்குமான பூரணமான விடை கிடைக்கவில்லை என்ற கருத்துகளும் உள்ளன. அவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது எங்களுக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. அந்த இடத்தில் நாங்கள் நின்று நேரடியாக பார்த்த பொழுது புலனாய்வு துறையினரின் பிரசன்னம் அங்கே அதிகமாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட இரும்புத் துண்டங்கள், பெண்களின் உள்ளாடைகள், உடைகள் போன்றவற்றை பெட்டிகளில் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

மறைந்து போகச் செய்தல் அல்லது காணாமல் ஆக்குதல் என்பது இலங்கை அரசாங்கத்தினுடைய சில பிரிவினருக்கு கை வந்த கலை. இங்கும் எடுக்கப்பட்ட தடயங்கள் கூட காணாமல் ஆக்கப்படலாம் என்று எமக்கு சந்தேகம் வந்தது. இது தொடர்பாக அன்றைக்கே ஊடகங்களுக்கு பேட்டிகளை கொடுத்திருந்தோம். இருந்தாலும் இன்னும் எங்களுக்கு ஒரு சந்தேகம் என்னவென்றால், 2009 ஆம் ஆண்டு வட்டுவாகல் பகுதியில் கையளிக்கப்பட்ட உறவுகள், கைது செய்யப்பட்டு பிடிக்கப்பட்ட விடுதலைப்புலி போராளிகள் உட்பட கடலிலே பிடிக்கப்பட்டவர்கள், முகாம்களிலே பிடிக்கப்பட்டவர்கள் என 14000 பேருக்கும் அதிகம் என்று சில ஊடகங்கள் மூலமாக அறியக் கூடியதாக இருக்கின்ற பொழுது, அவ்வளவு பேரும் எங்கே?

இன்றுவரைக்கும் இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட அந்த போராளிகளோ பொதுமக்களோ மீண்டு வரவில்லை. அப்படி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 2500 நாட்களுக்கு மேலாக போராடி கொண்டு இருக்கின்றார்கள். இப்படியான நிலைமையில் கொக்குத்தொடுவாயில் அகப்பட்ட மனிதப் புதைக்குழி அந்த சந்தேகத்தை எங்களுக்கு மேலும் வலுப்படுத்துகிறது. நாங்கள் மட்டுமல்ல காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அங்கே நின்றிருந்தார்கள். அவர்களுக்கும் இந்த புதைகுழி மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பொது மக்களும் அவ்வாறே கதைத்து கொண்டார்கள். அந்த வகையில் நான் 6 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் எமது சந்தேகங்களை வெளியிட்டேன். இவர்கள் கைது செய்தவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

1984 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 02 ஆம் திகதி ஒதியமலை படுகொலை நடந்த பொழுது இந்த கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி மக்களும் இராணுவத்தினால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். மக்கள் வெளியேற்றப்பட்டு மனித நடமாட்டம் இல்லாமல் சூனிய பிரதேசமாக இருந்தது. அதாவது இராணுவத்தினது நடமாட்டம் மட்டுமே அங்கிருந்த நிலையில் தான் அந்த பகுதி காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கடைசிப்பகுதிக்கு பிறகு தான் அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. அப்படியென்றால் 2009 ஆம் ஆண்டு சரணடைந்தவர்களை சிறைகளில் ஒப்படைக்கவில்லை. இப்படியான நிலையில் அவர்களை பேரூந்துகளில் ஏற்றிக் கொண்டு வந்து இங்கே புதைத்திருக்கலாம் என்ற எண்ணப்பாடு தோன்றுகிறது. சாதாரண ஒருவருக்கே இது புரியும்.

வட்டுவாகலில் மிகப்பெரிய விகாரை கட்டி இருக்கின்றார்கள். அருகாமையில் கேப்பாபிலவில் மிகப்பெரிய ஒரு விகாரை கட்டி இருக்கின்றார்கள். வட்டுவாகலில் கிட்டத்தட்ட 400 ஏக்கருக்கு மேல் இராணுவ தளம், விசேட அதிரடிப் படை முகாம் என மக்களின் குடியிருப்பு பகுதிகளோடு அமைத்திருக்கின்றார்கள். அக்கரை என்ற இடத்தில் 671 ஏக்கர் காணியில் கடற்படை முகாம் அமைத்திருக்கின்றார்கள். 2000 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் கேப்பாபிலவில் முகாம்கள் அமைத்திருக்கின்றார்கள். இந்த சூனிய பிரதேசம் என்று சொல்லக்கூடிய வெளியான இடத்திலேயே இப்படி புதைக்குழி இருக்குமாக இருந்தால் இவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இடங்களில் ஏன் புதைக்குழிகள் இருக்க முடியாது? விகாரைகளை அகழ்ந்து பார்த்தால் ஆயிரக்கணக்கானவர்களுடைய மனித எச்சங்கள் தோன்றக் கூடும் என்ற ஒரு ஐயப்பாடும் மக்கள் மனதிலும் எங்களுடைய மனதிலும் எழுந்துள்ளது.

நாங்கள் இந்த சந்தேகத்தை வெளிப்படையாக அறிவித்தோம். நாங்கள் மட்டுமல்ல காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் அறிவித்தார்கள். இதிலே உண்மை இல்லை, இது பொய் என்றால் இறுதி போரில் சரணடைந்த போராளிகளை நீங்கள் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் விடுவித்தால் இந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வரும்.

அதேநேரம் 6 ஆம் திகதி தோண்டப்பட்ட அந்த புதைகுழியில் இருந்து 13 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. அதிலே 12 பெண் போராளிகளினுடையது. அடுத்தகட்ட அகழ்வு தொடர்பாக நாங்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சட்டத்தரணிகள் எல்லோருமே கேட்டுக் கொண்டது சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இந்த மனித புதைக்குழி தோண்டப்பட வேண்டும் என்பதாகும். சர்வதேச கண்காணிப்பும் இதற்கு இருக்க வேண்டும். ஏற்கனவே உள்ள புதைகுழிக்கான முடிவுகள் இங்கே கிடைக்கவில்லை. அப்படி இருக்கும்போது எங்களுக்கு சந்தேகமாக இருக்கின்றது.

இந்த புதைகுழிக்கு சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்க வேண்டும். நீதி நியாயங்கள் என்ற அடிப்படையில் தீர்வுகள் நல்ல முறையில் கிடைக்க வேண்டும். நீதி காப்பாற்றப்பட வேண்டும் என்று கோரி இரண்டு போராட்டங்களும் உடனடியாக செய்திருக்கிறோம். எவ்வளவு ஒடுக்குமுறைகள் அடக்குமுறைகள் இருந்தாலும் நாங்களும் எங்களால் இயலக் கூடியளவு எங்களுக்கு நடக்கின்ற கொடுமைகளுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி கொண்டிருப்போம் என்பதையும் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

# மலையகம் 200 அடுத்து என்ன?




தொகுப்பு - ரஜீந்தினி

மலையக தமிழ் மக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகிவிட்டதை குறிக்கும் முகமாக "மாண்புமிகு மலையகம்-200" என்ற நடைபயணம் பல்வேறு வெகுசன அமைப்புகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. "வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட" என்ற தொனிப் பொருளில் இது ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்த மண்ணில் மலையக தமிழரின் வேர்களை உறுதி செய்வதற்கும் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நடைபயணத்தின் நோக்கமாக இருந்தது. ஆடி மாதம் 29 ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து ஆரம்பமான இந்த நடைபயணம் ஆவணி மாதம் 11 ஆம் திகதி மாத்தளையில் நிறைவடைந்தது.

இந்த நடைபயணத்தின் மூன்றாம் நாள் மலையக மக்களுடன் திருகோணமலையிலிருந்து வெகுசன அமைப்புகளும் கலந்து கொண்டு முருங்கன் தொடக்கம் மடு வரையிலான பயணத்திற்கு வலு சேர்த்தனர். அங்கு கலந்து கொண்ட மலையக மக்கள் மற்றும் திருகோணமலை வெகுசன அமைப்பு சார்ந்தோர் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு இங்கு தரப்பட்டுள்ளது.

## திருகோணமலை வெகுசன அமைப்பு சார்ந்தோரின் கருத்துகள்

பிரித்தானியர்களால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்ட தமிழர்களே மலையக மக்கள். இத்தனை ஆண்டுகளின் பின்னரும் அவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இன்னமும் பல அடிப்படை உரிமைகள் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்பட்ட வகையில் தமது வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இவற்றை முன்னிலைப்படுத்தி மலையகம் சார்ந்தோரால் நடைபயணம் இடம் பெற்று கொண்டிருக்கிறது. அந்தவகையில் வலியை சுமந்த வரலாற்றுடையவர்களாக தமிழர்களாகிய நாங்கள், திருகோணமலை சிவில் அமைப்பினர்களாக அவர்களுக்கு உறுதுணையாக நாங்களும் இருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்தி இந்த நெடிய பயணத்தில் அவர்களுடன் இணைந்துள்ளோம்.

இந்த நடைபயணமானது நாங்கள் மலையக மக்களுடன் கலந்துரையாடுவதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பமாகவும் அமைந்திருந்தது என்று சொல்லலாம். சுமார் 200 வருட காலமாக அவர்கள் அனுபவித்து வருகின்ற வேதனைகளையும் அடக்குமுறைகளையும் அறியக் கூடியதாக இருந்தது. எந்தளவிற்கு மலையக மக்களின் உரிமைகள் பறித்து ஒடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதனை அவர்களின் உணர்வுபூர்வமான வெளிப்படையான கருத்துகள் மூலம் தெரிந்து கொண்டோம். 1823 ஆம் ஆண்டிலிருந்து மலையக மக்கள் ஆண்டாண்டு காலம் தாம் பட்ட கஷ்டம் மற்றும் தம் முன்னோர்களின் வலி வேதனைகளை சுட்டிக் காட்டினார்கள். நாங்கள் அவர்கள் வாழ்ந்த அந்த நெருக்கடியான வாழ்வை ஒருநாளில் சில மணி நேரம் அனுபவித்தோம் என்று சொல்லலாம்.

இன்று சில மணி நேரங்கள் நடந்த எமக்கு இவ்வாறு கடினமாக இருந்தால் அவர்கள் எவ்வளவு வேதனையுடன் நடந்திருப்பார்கள் என்பதையும் உணரக் கூடியதாக இருந்தது. நாங்கள் முடிந்தளவு அவர்களுடன் கலந்துரையாடியதில் தமக்கான அடிப்படை உரிமையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின்

> **மலையக மக்கள் தமது அழகை கூட இரசிக்க முடியாமல், கவனிக்க முடியாதளவிற்கு உடலில் மாத்திரமல்ல மனதிலும் காயங்கள் தழும்புகளுடன் காணப்பட்டதை உணரக் கூடியதாக இருந்தது**

ஒன்றிணைந்த கருத்தாக இருந்தது. நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற, பெருமளவிலான அந்நிய செலாவணியை ஈட்டி தந்து கொண்டிருக்கின்ற மலையக மக்களுக்கு அடிப்படை உரிமையை கூட வழங்காமல் இருப்பதென்பது மிகவும் கண்டனத்துக்குரிய விடயம்.

மலையக மக்கள் தமது கருத்துகளை எங்களுடன் பகிரும் பொழுது அவர்களுக்கான ஒரு வேளை உணவு கூட திருப்தியற்று இருக்கின்ற நிலையில் ஒழுங்கான போக்குவரத்து வசதி இன்மை, கல்வி கற்கும் பிள்ளைகளுக்கான சிறந்த கல்வி சேவை இன்மை, சுகாதார வசதி இன்மை என பல்வகையான பிரச்சினைகளுக்கும் இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை என்றும், தமக்கான தேசிய அடையாளம் இல்லாமல் பல பெயர்களில் தோட்டக்காட்டான், இந்திய தமிழன், மலையகத்தான் என்று அழைக்கப்பட்டு வருவதை எண்ணி மனம் வருந்துவதாகவும் கவலையுடன் கூறினர்.

இந்த நடைபயணத்தில் கலந்து கொண்ட மலையக பெண் ஒருவர் கூறும் போது, “எனது கைகள் இந்த 3 நாட்கள் கொழுந்து பறிக்காமல் இருக்கும் போதே இவ்வளவு அழகாக இருக்கின்றனவே நான் கொழுந்து பறிக்காமலே இருந்தால் எவ்வளவு அழகாக மாறும்” என்று சொன்னார். எங்களுக்கு இதை கேட்கும் போது மிகவும் மன வருத்தமாக இருந்தது. மலையக பெண்கள் தமது அழகை கூட இரசிக்க முடியாமல், கவனிக்க முடியாதளவிற்கு உடலில் மாத்திரமல்ல மனதிலும் காயங்கள் தழும்புகளுடன் காணப்பட்டதை உணரக் கூடியதாக இருந்தது.

அவர்கள் காலை 07.30 மணியளவில் தோட்ட வேலைக்கு சென்றால் மாலை 4.30





மணி வரையில்  குளிர் அதிகமாக இருக்கும் பட்சத்தில் கூட அட்டை கடிக்கு மத்தியில் 20 கிலோ தேயிலை கொழுந்து பறித்தால் மாத்திரம் அவர்களுக்கான சம்பளம் நாள் ஒன்றுக்கு 850 ரூபாய் கிடைக்கிறது. அவர்களுக்கு வேலை நேரத்தில் இருந்து சாப்பிடுவதற்கும் இடமில்லை, கழிப்பறை வசதிகளும் இல்லை. இவ்வாறான ஒடுக்கப்பட்ட மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுவதும் அவர்களுக்கு மற்றைய இனத்தவர்களுக்கு காணப்படுவது போன்ற அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டியதும் கட்டாயமாகும்.


அத்தோடு ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் பிரச்சினைகளிலும் துன்பத்திலும் என்றும் உறுதுணையாக ஆதரவு கரம் நீட்டுவோம் என்பதையும் மீள வலியுறுத்துகிறோம். இவ் வலிகளை தாங்கிய பயணமானது அவர்கள் தம் அடிப்படை உரிமைகளை பெற்று இந்நாட்டிலே மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ வழி வகுக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பாகவும் வேண்டுகோளாகவும் இருக்கிறது. இதேவேளை மலையக மக்களிடத்திலும் சில வேண்டுகோள்களை நாங்கள் முன்வைக்க விரும்புகிறோம்.

வடக்கு கிழக்கை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் எங்களுக்கும் ஏராளமான பிரச்சனைகள் இருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விடயமே. மிகப்பெரிய இன சுத்திகரிப்பிற்கு முகங்கொடுத்தவர்களாக இருக்கின்றோம். இன்று வரையில் பெரும்பான்மை இனத்தவர்களால் அழுத்தங்கள், ஆக்கிரமிப்புக்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. நாங்கள் எமக்கான தீர்விற்காக அரசோடு இணைந்து கேட்டோம், அமைதி வழியாக போராடியும் பார்த்தோம், இறுதியில் ஆயுதம் ஏந்த உந்தப்பட்டு இலட்ச கணக்கான அப்பாவி தமிழ் உறவுகளை இழந்தோம். காலம் காலமாக எங்களது பிரச்சனைகளை முடிந்தவரையில் வெளி உலகிற்கும் ஐ.நா வரையிலும் கொண்டு சென்றுள்ளோம். இருந்த போதும் எங்களுக்கான எந்தவொரு தீர்வு நடவடிக்கைகளும் இன்னும் முன்னெடுக்கப்படவில்லை. அப்படியிருக்கையில், மலையகத்தவர்களாகிய நீங்கள் உங்களது கோரிக்கைகளை யாரை நோக்கி முன்வைக்கிறீர்கள் என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சிறிலங்கா அரசிற்கு எடுத்து சொல்வதில் எந்தவித பயனும் இல்லை என்பதே திண்ணம். ஆகவே நீங்கள் உங்களை இலங்கைக்கு கொண்டு வந்து நடு வீதியிலே கைவிட்டு சென்ற பிரித்தானியருக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக ஐ.நா விலும் உங்கள் பிரச்சனைகள் தொடர்பாக பேச வேண்டிய தேவையும் கட்டாயமும் இருக்கிறது. இதுவரை அரசுடன் ஒத்து உறவாடிய மலையக அரசியல்வாதிகளால் உங்கள் அடிப்படைப் பிரச்சனைகளை தீர்க்க முடியவில்லை. இனிவரும் காலங்களிலாவது காணியுரிமை உட்பட கௌரவமான வாழ்க்கையை வென்றெடுக்க கூடிய அரசியற் தலைமையை தெரிவு செய்யுங்கள். தமக்கு வாக்களித்த சமூகத்தின் பிரச்சனைகளை தீர்ப்பதை விடுத்து சுய இலாப அரசியலில் ஈடுபடுகின்றவர்களை தவிர்த்து விடுங்கள். இனத்தின் மீது அக்கறை கொண்டிருக்கின்ற தலைமைகளை தெரிவு செய்யுங்கள். அவர்கள் ஊடாக உங்களது பிரச்சனைகளை உலகளவில் பேசப்பட செய்யுங்கள்.

அத்தோடு உங்களது வரலாற்றினை இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு முழு

மையாக தெரியப்படுத்துங்கள். அவர்கள் தங்களை தாம் மலையகம் என்று அடையாளப்படுத்த வேண்டிய தேவையை உணர்த்துங்கள். அது மட்டுமல்லாமல் இந்நாட்டில் அந்நிய செலாவணியை ஈட்டி தருகின்ற மலையக சமூகத்திற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் உழைப்பை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தையும் தூக்கி நிறுத்த வேண்டிய அரசாங்கம் அதனை செய்யாமல் பெருந்தோட்டங்களை மூடுகின்றது. இதனால் மலையகத்தவர்கள் வேலையற்றவர்கள் ஆக்கப்பட்டு வேலைகளை தேடி வெளி மாவட்டங்களுக்கு செல்கின்றனர். இவை பற்றியும் சிந்தித்து செயற்படுங்கள்.




**- மாத்தளை பிரகடனம் -**

**மலையகம் சார்ந்தோரின் கருத்துகள்.**

**#** ஜெயரட்ணம் சுரேஷ் :

நான் தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரையிலான இந்த எழுச்சி பேரணியில் ஒரு மலையக தொழிலாளியாக வேஷமிட்டு நடக்கின்றேன். நான் தேயிலை கூடை ஒன்றை வைத்திருக்கிறேன் அத்துடன் இறப்பர் சீவும் கத்தி மற்றும் ஒட்டுப் பால் என்று சொல்லப்படும் இறப்பர் பாலை இடும் பை என்பவற்றையும் வைத்திருக்கிறேன். இறப்பர் தோட்டங்களில் வேலை செய்வதும் தேயிலை பறிக்கும் வேலையை செய்வதும் தான் மலையக தமிழர்களின் தற்போதைய நிலை.

1820 களிலே இருந்து இன்றும் அரை அடிமைகளாகவே இந்நாட்டிலே இருக்கின்றோம். நாங்கள் இந்த நாட்டிலே அடிமைகள் இல்லாமல், சக பிரஜைகளாக வாழ்வதற்கான அனைத்து விதமான சட்ட ரீதியான ஏற்பாடுகளும் தற்சமயம் இருக்கின்றன. நாங்களும் உங்களைப் போலவே சக வாக்காளர்கள். சகல அதிகாரங்களையும் உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடைய பிரஜைகளாக இருக்கின்றோம். ஆனால் கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, அரச சேவை இவ்வாறாக பல்வேறு விதமான சேவைகளை இன்றும் கூட ஏனைய சமூகங்களுக்கு வழங்குவதற்கு நிகராக எமக்கு வழங்காத ஒரு நிலை காணப்படுகின்றது. அவற்றை சம அந்தஸ்துடன் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இழந்த ஒரு சமூகமாக இருக்கின்றோம். இவ்வாறு பாகுபாடு காட்டுவது அடிப்படை உரிமை மீறும் செயற்பாடாக இருக்கும்.

இன்றும் நாங்கள் ஒரு முகவரி அற்ற சமூகமாக இருக்கின்றோம். எங்களுக்கு ஒரு கடிதம் வருமாக இருந்தால் அது நேரடியாக எமக்கு வந்து சேராது. அது தோட்ட முகாமைக்குத்தான் செல்கின்றது. இது நேரடியாகவே நாம் முகவரியற்ற சமூகம் என்பதை சொல்கிறது.

இது அரசியல் ரீதியான ஒரு பிரச்சனை. அவ்வப்போது வந்து செல்லும் அரசாங்கங்கள் இதற்கான கொள்கை சீர்திருத்தங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்களுக்கேற்ற வகையில், அவர்களது சுய இலாபத்திற்காக கிள்ளித் தரப்படும் உரிமைகளை பெற்றுக்கொள்வதை நாங்கள் எதிர்க்கின்

றோம். ஆகவே நாங்கள் சொல்கின்ற ஒரே ஒரு விடயம், நாங்கள் சம அந்தஸ்து உடைய சக பிரஜைகள், சம உரிமைகள் எங்களுக்கு கிடைக்க வேண்டும்.

இந்த 200 வருட கால அடிமைத்தனத்தின் கஷ்டங்களை வெளிப்படுத்தும் ஒரு காட்சியாக நான் இங்கே நடந்து கொண்டிருக்கின்றேன். இன்றும் கூட கால்கள் விலங்குகளால் கட்டப்பட்டு இருக்கின்றன. சில சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் முயற்சித்தோமானால் அந்த சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாது எங்கள் கால்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. ஓர் உதாரணத்தை சொல்கிறேன். தோட்டத்தில் வாழும் ஒருவருக்கு ஒரு வியாபாரத்தை பதிவு செய்ய முடியாது. ஏனென்றால் அவருக்கு ஒரு காணி உறுதி தேவை. ஆனால், மலையகத் தமிழர்களுக்கு அவர்களுக்கான காணி உறுதிகள் எங்கே இருக்கின்றன? 200 வருட காலமாக அந்த உரிமை மறுக்கப்பட்டே இருக்கின்றது. அவ்வாறாக ஒவ்வொன்றையும் பட்டியல் இடலாம்.

ஆகவே இது பாரியளவில் பேசப்பட்டு ஏனைய சமூகங்களும் கலந்துரையாடி அனைத்து சமூகங்களின் அழுத்தத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது. எங்கள் தோட்டங்களில் உள்ள மரங்களின் வேர்களிலே இரத்தங்கள் படிந்து கசிந்து இருக்கின்றன. ஆகவே தான் நாங்கள் சொல்கின்றோம் 201 வது வருடமோ அல்லது அதற்கு பிறகு வரும் காலங்களிலும் இந்த நிலை தொடரக் கூடாது. ஆகவே நாங்கள் இந்த எழுச்சி பயணத்தை ஆரம்பித்து இருக்கின்றோம். இதனூடாக ஒரு கலந்துரையாடலை ஆரம்பித்து இருக்கிறோம். நாங்கள் இதனை ஆரம்பிக்கவில்லை என்றால் யார் ஆரம்பிப்பார்? ஆகவே உங்களுடைய ஒத்துழைப்பை நாங்கள் கேட்கின்றோம். உங்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்கு அவசியம்.

நாங்கள் ஒடுக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட சமூகமாக இதற்கு குரல் கொடுப்பது எந்தளவுக்கு அழுத்தமான குரலாக அமையும் என்பது எங்களுக்கு தெரியவில்லை. எல்லோரும் வந்து எங்களுடன் சேர்ந்து பயணியுங்கள். எமது பிரச்சனைகள் தேசிய மட்டத்தில் பேசப்பட வேண்டும், கிராம மட்டத்தில் பேசப்பட வேண்டும். குறிப்பாக சிங்கள, மற்றும் தமிழ் கிராமங்களில் பேசப்பட வேண்டும். அதேபோல ஐ.நா விலும் பேசப்பட வேண்டும். இது ஒரு அடிப்படை உரிமை மீறிய செயற்பாடு. 1948 களில் மனித உரிமை சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட இன்றும் நாம் அரை அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு தயவுசெய்து நீங்களும் குரல் கொடுங்கள் என்ற வேண்டுதலை ஒரு மலையக தமிழனாக முன்வைக்கின்றேன்.

**#** பாப்பாத்தி (பொகவந்தலாவ தேயிலைத் தோட்ட தொழிலாளி) :

நாங்கள் லயத்தில் தான் இருக்கிறோம். காலையில் 7.30 மணி 8 மணிக்குள் நாங்கள் மலைக்கு வேலைக்கு கொழுந்து பறிப்பதற்காக போய்விடுவோம். வேலை செய்யும் போது 10 மணியில் இருந்து 10.30 மணி வரைக்கும் எங்களுக்கு தேநீர் இடைவேளை. அந்த நேரத்தில் தான் நாங்கள் இரவு சமைத்து எடுத்து கொண்டு வந்திருக்கின்ற பழைய சாப்பாட்டை சாப்பிடுவோம். பிறகு திரும்பவும் கொழுந்து பறிப்போம். பிறகு மதிய நேர சாப்பாட்டிற்கு வீட்டிற்கு பக்கத்தில் இருக்கின்ற மலையாக இருந்தால் வீட்டிற்கு போவோம். இல்லை என்றால் போக மாட்டோம்.

முன்பு 1.30 மணிக்கு அல்லது 2 மணிக்கு என்று வேலை விடுவார்கள். ஆனால் இந்த 1000 ரூபாய் சம்பளம் என்றதன் பின்பு 3.30 மணிக்கு அல்லது 4 மணிக்கு தான் வேலையிலிருந்து விடுகிறார்கள். அதுவரைக்கும் நாங்கள் அந்த தேயிலை காட்டில் தான் இருப்போம். இந்த 1000 ரூபாய் சம்பளம் என்று வந்த பின்பு எங்களுக்கு இருந்த கொஞ்ச நிம்மதியும் போய் விட்டது. ஏனென்றால் 1000 ரூபாய் தருகிறோம் என்று சொல்லி ஒரு கிலோகிராம் அரிசி 220 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதனை வாங்கி சாப்பிட வேண்டும். சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்படுகிறோம்.

இன்னொரு விடயம் மலையில் உள்ள அட்டைகள். அத்துடன் குளவிகளிடம் நாங்கள் பெரும்பாடு படுகின்றோம். மழை காலத்தில் கொழுந்து எடுத்து கொண்டு போகும் போது தேயிலையின் அடியில் குளவி கூடு கட்டி இருந்தால் எங்களுக்கு பார்க்கும் போது தெரியாது. அவ்வாறாக குளவி கொத்தி நிறைய பேர் செத்திருக்கிறார்கள். அதேபோல மலையில்

சிறுத்தைப்புலிகளின் அச்சுறுத்தலும் இருக்கின்றன. இலங்கையில் தேயிலை வருமானம் அதிகம். நாங்கள் கொழுந்து பறித்துக் கொடுக்கின்ற வருமானத்தில் அந்த அட்டைக்கு மருந்தடித்து சுதந்திரமாக கொழுந்து எடுப்பதற்கு கொடுக்கலாம் தானே. அவர்கள் நினைத்தால் அட்டைக்கு எதனையும் செய்யலாம். சிறுத்தைப் புலிக்கு எதையும் செய்யலாம். குளவிக்கு எதையும் செய்யலாம். ஆனால் அதனை கூட செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி எங்களுக்கு பல பிரச்சனைகள் இருக்கின்றன.

**#** முருகன் கணேசன் - பொகவந்தலாவ :

எங்களுடைய மலையக மக்களுக்கு உரிய உரிமை வேண்டும். அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனைய சமூக மக்களைப் போல இந்த மலையக மக்களையும் நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும். ஆகவேதான் உணர்வுபூர்வமாக இந்த நடைபயணத்தை செய்கிறோம். மன்னாரில் இருந்து வரும் போது இங்குள்ள மக்கள் அனைவரும் எங்களுக்கு ஆதரவு வழங்கி ஊக்கத்தை கொடுத்து மிகவும் மகிழ்ச்சியாக எங்களை வரவேற்றார்கள். இப்படியொரு வரவேற்பு மலையக மக்களுக்கு உண்டா என்பதனை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

நாங்கள் நாடற்றவர்கள் என்று எங்களை ஒதுக்கு புறமாக வைத்திருக்கிறார்கள். நாங்களும் இந்த நாட்டில் உழைக்கும் மக்கள். இந்த நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தை அள்ளிக் கொடுக்கும் இந்த மலையக மக்கள் 5 இலட்சம் பேர் இருந்தார்கள். இன்று அவ்வளவு பேர் இல்லை. இவர்கள் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாக நாட்டிற்கு வருமானமும் குறைகிறது. அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தை கொடுத்தால் இந்த நிலை வராது. மலையக மக்களின் உழைப்பை வேண்டிக் கொண்டு அவர்களுக்கு உரிய உணவைக் கொடுப்பதில்லை. முன்னர் கொடுத்தவற்றையும் இப்போது கொடுப்பதில்லை. குழந்தைகளுக்கு பால்மா கொடுத்தார்கள் அது தற்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. மா கொடுத்தார்கள் அதுவும் நிறுத்தப்பட்டது. மருந்துகள் கொடுக்கப்பட்டு வந்தன அதனையும் நிறுத்தி விட்டார்கள். லயத்தை துப்பரவு செய்வதற்கென இருந்தவர்களையும் நிறுத்தி விட்டார்கள். இவற்றையெல்லாம் முன்னிறுத்தி ஒரு அரசியல் அழுத்தத்தை கொடுப்பதற்காக இந்த நடைபயணத்தை செய்கிறோம்.

---

(03ஆம் பக்க தொடர்ச்சி)

உதாரணத்திற்கு கிளிசரியா போன்றவற்றை நாங்கள் வேலிகளில் நடுகிறோம். முக்கியமாக ஆமணக்கு என்கிற விளக்கெண்ணெய் செடி பூச்சிகளை நுழைய விடாது. வெளியிலேயே கட்டுப்படுத்தி விடும். ஆகவே எல்லைகளில் ஆமணக்கு, துவரை, புளிச்சக்கீரை இந்த மாதிரியான செடிகளை பயன்படுத்துகிறோம். அத்தோடு காய்கறி செடிகளுக்கு பக்கத்தில் 4,5 இடங்களில் பலகையில் மஞ்சள் வர்ணம் அடித்து அதில் விளக்கெண்ணெய் அல்லது grease தடவி வைத்திருப்போம். இதுதான் எங்களுக்கு அறிவித்தல் பலகை. யார் யார் எங்கள் அனுமதி இல்லாமல் இந்த தோட்டத்திற்குள் வந்திருக்கிறார்கள், என்ன என்ன பூச்சிகள் வந்திருக்கின்றன என்பவற்றை அறிவிக்கின்ற ஒரு அறிவிப்பு பலகையாக இது இருக்கிறது. இதில் விளக்கெண்ணெய் தடவி வைத்ததும் பூச்சிகள் எல்லாம் அதனால் கவரப்பட்டு அந்த பலகையில் போய் ஒட்டிக்கொள்ளும். 2,3 நாட்களுக்கு பிறகு ஒரு துணியால் அதை துடைத்து விட்டு திரும்பவும் எண்ணெய் தடவி வைக்கிறோம். இப்படி செய்வதன் மூலமாக பெரும்பாலான பூச்சிகள் தானாகவே அந்த மஞ்சள் பலகைக்கு வந்துவிடும். அந்த பலகைகளை என்ன செடி வைத்திருக்கிறீர்களோ அதை விட ஒரு அடி உயரத்தில் வைக்க வேண்டும். அப்போது தான் பூச்சிகளுக்கு அந்த பலகை இருப்பது தெரியும். அதில் எண்ணெய் தடவி ஏன் வைக்கிறோம் என்றால், பூச்சிகள் ஒட்டிக்கொள்ளும். நகர்ந்து போக முடியாது. உணவு தேட முடியாது. அவற்றினுடைய பெருமளவிலான பெருக்கத்தை நீங்கள் தடை செய்யலாம்.

தென்னையில் வெள்ளை ஈ யின் தாக்குதல் ரொம்ப அதிகமாக இருக்கிறது. கொழும்பு உட்பட பல மாவட்டங்களில் இதனை பார்த்தோம். இந்த வெள்ளை ஈ அடிப்பக்கத்தில் இருந்து தென்னை மரத்தினுடைய ஓலைகளை அரி



க்கிறது. அதற்கு பிறகு அதனுடைய எச்சத்தில் கறுப்பு நிற பூஞ்சணம் வளர்கின்றது. அது இலைகள் வளர்ச்சியடைவதையும் உணவு தயார் செய்வதையும் தடுப்பதனால் தென்னை மரத்திற்கு மிகப்பெரும் சேதத்தை உருவாக்குகிறது. இதற்கு முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டிய வேலையே மஞ்சள் பலகை தான். இதில் விளக்கெண்ணெய், grease, அல்லது ஒட்டும் பொருட்களை பயன்படுத்தலாம். அவற்றில் வெள்ளை ஈ மற்றும் பூச்சிகள் ஒட்டிக் கொள்ளும். வீட்டுத்தோட்டம் செய்யும் பெரும்பாலானவர்கள் தென்னை மரத்திற்கு கீழ் தான் தமது படுக்கைகளையும் உயிர்வேலிகளையும் அமைத்து பல பயிர் சாகுபடியை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வெள்ளை ஈ யை கட்டுப்படுத்துவது சுலபமாக இருக்கிறது. மஞ்சள் ஒட்டும் பலகையை ஒரு தடவை வைத்தாலே போதுமானது. இது மிகுந்த அளவில் பயனளிக்க கூடிய ஒரு முறையாக இருக்கிறது.

வெள்ளை ஈ யை கட்டுப்படுத்த இன்னுமொரு சிறந்த முறை என்னவென்றால் ஒரு கிலோ கோதுமை மாவினை எடுத்து ஒரு லீற்றர் தண்ணீரில் கரைத்து பசையாக காய்ச்சி அதன் பின்பு இதனை 100 லீற்றர் தண்ணீருடன் நல்ல நீர் பாங்காக அமைக்க வேண்டும். அதை இலையின் அடிப்பக்கத்தில் மாலை நேரத்தில் தெளித்து விட்டால் வெள்ளை ஈ யும் சரி அதனால் உருவாக்கப்பட்ட பூஞ்சணமும் சரி எல்லாமே இந்த பசையில் ஒட்டிக் கொள்ளும். இந்த பசை காய்ந்து கீழே தூளாக விழும் போது அவற்றையும் அழித்துக் கொண்டு விழுந்து விடும். இவ்வாறாக வெள்ளை ஈ யை நாங்கள் பெருமளவு கட்டுப்படுத்தி இருக்கிறோம்.

**வட மாகாணத்தின் தீவு பகுதிகளில் எவ்வாறான பயிர்ச்செய்கையினை செய்தால் மண்ணை நலப்படுத்த கூடியதாக இருக்கும்?**

முன்னர் தீவுப் பகுதிகளில் அதிகளவான பயிர்செய்கை செய்யப்பட்டிருக்கிறது, எனினும் தற்போது அவ்வாறில்லை. காலநிலை மாற்றத்தினால் நீண்ட வரட்சி இருக்கலாம். மழை வராமல் இருக்கலாம். ஒரு மழைக்கும் அடுத்த மழைக்கும் இடையில் நீண்ட இடைவெளிகள் இருக்கலாம். இந்த தீவுகளில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் மிகப்பெரிய அனுபவத்தை கொண்டு இருந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் மூலிகைகளை வளர்க்கிற ஒரு இடமாகவும் இருந்திருக்கிறது. தற்போது விவசாயத்தை பெரும் சவால் நிறைந்ததாக தான் அங்கு பார்க்கிறார்கள். ஏனென்றால் நிறைய இடங்கள் கடல் தண்ணீர் உள்ளே வந்து உப்பாகி விட்டது. இந்த உப்பு நிலங்களில் பெரிதாக ஒரு பயிர்ச்செய்கையும் செய்ய முடியவில்லை. அந்த நிலங்களில் ஏற்கனவே உள்ளுக்குள் கல் இருப்பதனால் பெரும் பயிர்களை பயிரிட முடியவில்லை. அங்கு மண் இல்லாத இடங்கள் கூட இருக்கின்றன. அதனால் பெருமளவு மக்கள் வேறு வேலைகள் தேடி வெளியேறி இருக்கிறார்கள். இந்த தீவு தனித்துவமான தீவு பகுதி. மூலிகை சாகுபடிகளையும் குறிப்பாக சொல்லப்போனால் சோற்றுக் கற்றாளை அவ்வளவு வறண்ட நிலத்திலும் மோசமான சூழ்நிலையிலும் மிகவும் செழிப்பாக வளர்ந்திருந்தது.

இந்த காட்சிகள் அங்கு எவற்றை முன்னெடுக்கலாம் என்று உற்சாகம் அளித்தது.

உப்பு நிலத்தை சரி செய்வது என்பது மிகவும் கடினமான வேலை கிடையாது. தொடர்ச்சியாக செய்ய வேண்டிய சில செயற்பாடுகளை மட்டுமே உள்ளடக்கி இருக்கிறது. அங்கு வேளாண்மை செய்பவர்களை அழைத்து பேசினோம். அவர்கள் மிகவும் உற்சாகம் அடைந்தார்கள். அங்கிருந்த அதிகாரிகளும் வரவேற்றார்கள். நிச்சயமாக இதனை செய்து பார்க்கலாம் என்று கூறி இருக்கிறார்கள். வருங்காலம் நன்றாக இருக்கும். ஏனென்றால் எல்லோருமே நம்பிக்கையாக இருக்கிறார்கள், ஒருமுறை செய்து பார்ப்போம் என்று. நாங்கள் அவர்களிடம் சொன்னோம் எந்த பகுதி சாதகமாக இருக்கிறதோ அந்த பகுதியில் சிறுதானியத்தை தொடங்குங்கள் என்று. இந்த சிறுதானியங்களுக்கு விற்பனை வாய்ப்புகளும் இருக்கின்றன. சிறுதானியங்கள் பயிர் செய்வதில் அவர்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய தடை என்னவென்றால் நீர் வடியாமல் போய்விட்டால் மழை காலத்தில் அதிகமாக தண்ணீர் தேங்கி விடும். அவை அழுகி வீணாகி போய்விடுமே என்று கவலைப் பட்டார்கள். அப்போது தான் நாங்கள் உயிர்த் தெழும் பூமியினது நடவடிக்கைகளை பற்றி சொன்னோம். எப்படி மேட்டு பாத்திகளை அமைப்பது, ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்றவாறு வடிகால் வசதிகளை அமைப்பது பற்றி சொன்னோம்.

நீர் பற்றாக்குறை இருக்கின்றது என்பதை அவர்கள் பெரும் கவலையாக சொன்னார்கள். ஆனால் ஒரு குறிப்பிடத்தக்க விடயம், கடற்புறத்தின் அருகாமையில் இருப்பதனால் மழை வந்தால் முதலில் இவர்களை தான் சந்திக்கும். மழைநீரை அறுவடை செய்வது கிணறுகளில் தான். கிணறுகள் அங்கே இருக்கின்றன. அவை சரியான முறையில் பராமரிக்கப்படாமையால் அந்த நீர் அறுவடை குறைந்திருக்கிறது. இந்த மாதிரியான சில வேலைகளை திட்டமிட்டு செய்தோம் என்றால் நெடுந்தீவு மற்றும் அதை சுற்றி இருக்கின்ற பல தீவு பகுதிகளுக்கு காய்கறிகளை கொடுக்க கூடிய உயர் விளைச்சலைக் கொடுக்க கூடிய ஒரு செழிப்பான பகுதியாக அந்நிலங்கள் மாறும்.

கடந்த 50 வருடங்களுக்குள் தான் நிலம் உப்பு தன்மை அதிகமாகி கடினமானதாக மாறி இருக்கிறது. எங்களுடைய அனுபவத்தில் எந்தவொரு நிலத்தையும் வெறும் 45 நாட்களில் பொன் விளையும் பூமியாக மாற்ற முடியும்.

முதலில் உணவை அந்த நிலத்திற்கு கொடுக்க வேண்டும். இழந்த தாது பொருட்களை எல்லாம் கொண்டுவந்து மேல் மண்ணில் சேர்க்க வேண்டி இருக்கிறது. இதற்கு நாங்கள் ஒரு முறையை பின்பற்றுகிறோம். அதனை மீள் உருவாக்கம் செய்யும் முறை என்று சொல்கிறோம். இதில் 20 வகையான பயிர்களை 20 கிலோ எடுத்து கொள்கிறோம். ஒரு ஏக்கருக்கு 20 கிலோ என்ற விகிதத்தில் அதை பரவலாக தூவி வளர்த்து எடுக்கிறோம். 40 நாட்களுக்குள் அவை பூக்க தொடங்கும்போது அவற்றை மண்ணிற்கே உணவாக கொடுத்து விடுவோம். அதன் மூலம் மண்ணில் இருக்க கூடிய நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் இவற்றின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துகிறோம். பல வகையான தானியங்களை வளர்த்ததன் காரணமாக ஒவ்வொரு பயிரும் ஒவ்வொரு சத்துக்களை நிலத்துக்கு கொடுக்கின்றன. ஆகவே இந்த நிலங்களின் மேல் மண் எவ்வளவு கெட்டுப் போயிருந்தாலும் உடனடியாக இந்த பயிர்களின் சத்ததுக்களால் நிரப்பப்படுகிறது.

அடுத்து 40 நாட்களுக்கு பிறகு பயிர்ச் செய்கையை தொடங்கும் போது அந்த பயிருக்கு தேவையான அனைத்து ஊட்டப் பொருளும் இவற்றில் இருந்தே கிடைத்துவிடும். ஆகவே நாங்கள் வெளியில் இருந்து இரசாயன பொருட்களையோ அல்லது வேறு எதனையோ வாங்கி பயன்படுத்த வேண்டிய அவசியமே இருக்காது. மண்ணை நிலப் போர்வை என்று நாங்கள் மூடி வைப்பதனால் அதில் களைகள் முளைப்பதில்லை, ஈரம் கட்டுப்படுத்தப்படுகிறது. தண்ணீர் வடிவதற்கு மட்டும் ஒரு சரியான முறையில் மீள் உருவாக்கல் முறையை செய்தால், அதாவது நிலத்திற்குள்ளேயே வடிகால் அமைத்து கிணறுக்கு நீர் போவது போல செய்தால் கிணறு மீள் உருவாக்கம் ஆவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. நாங்கள் அங்கிருந்தவர்களுடன் கதைத்ததன் பிறகு அவர்கள் எங்களுடன் இணைந்து வேலையை செய்வதாக நம்பிக்கையுடன் கூறி உள்ளார்கள்.

**அடுத்த இதழில் தொடரும்...**




# எமது சேமிப்பை அபகரிக்கும் அரசு

முகவுரை

கலாநிதி நிஷான் டி மெல் (டெய்லி மிரர்), தமிழில் - லிங்கம்

ஊழியர் சேமலாப நிதி (**EPF**) என்ற மிகப் பெரிய நிதியத்தை உள்ளடக்கிய நீண்டகால ஓய்வூதிய சேமிப்பு நிதிகள் அவற்றின் மொத்த வருவாயின் 14 சதவிகிதத்தை அரசாங்கத்துக்கு கட்ட வேண்டும் (**14% tax on gross earnings**). 1989 வரை நீண்டகால ஓய்வூதிய சேமிப்பு நிதிகளுக்கு வரி விதிக்கப்படவில்லை. அந்த ஆண்டில், தெற்கில் நடந்த JVP கிளர்ச்சி மற்றும் வடக்கில் புலிகளுடன் நடத்திய போர் காரணமாக சிறிலங்கா அரசாங்கம் கடுமையான வருவாய் பற்றாக்குறையை எதிர்கொண்டது. அதனை ஈடுகட்ட உழைக்கும் மக்கள் தமது சொற்ப சேமிப்பை போட்டு வைத்திருந்த நீண்ட கால ஓய்வூதிய சேமிப்பு நிதிகளின் மொத்த வருமானத்தில் 10 வீதத்தை அரசாங்கம் வரியாக அறவிடத் தொடங்கியது.

இதன் விளைவாக, சிறிலங்காவில் வரி செலுத்தும் கூட்டுத்தாபனங்களில் மிகப்பெரிய வரி செலுத்தும் ஒரே ஒரு கூட்டுத்தாபனமாக **EPF** மாறியது. அது திறைசேரிக்கு ஆகவும் கூடிய பொன் முட்டையிடும் வாத்தாக மாறிப் போனது. அடுத்தடுத்து வந்த அனைத்து அரசாங்கங்களும் மகிழ்ச்சியாக **EPF** இன் பொன் முட்டைகளை திருடிக் கொண்டன. 2017 ஆம் ஆண்டு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம், இந்த அநியாய வரியை ஒழிப்பதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் காலியான திறைசேரியை நிரப்புவதற்காக வரி விகிதத்தை 10% இலிருந்து 14% ஆக உயர்த்தியது. இந்த வரி விகிதம்தான் இன்று வரை தொடர்கிறது.

இவ்வாறான பின்னணியில் தான் இன்றைய உள்நாட்டு கடன்களின் மறுசீரமைப்பிலும் அரசாங்கம் மீண்டும் நீண்டகால ஓய்வூதிய நிதியங்களில் மீது கை வைத்திருக்கிறது. சிறிலங்கா அரசுக்கு கடன் கொடுத்த வெளிநாட்டு கடன் வழங்குனர்களும் சர்வதேச நாணய நிதியமும் வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்பட முன்னர் உள்நாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை முன்நிபந்தனையாக வைத்தன. வேறு வழி இல்லாமல் அரசாங்கம் அதற்கு இணங்கி இருக்கிறது. ஆனால், உள்நாட்டு கடன்களின் மறுசீரமைப்பு (**Domestic Debt Restructure, DDR**) செயற்பாட்டில் தனக்கு கடன் கொடுப்பதன் மூலம் இலாபம் ஈட்டிக் கொண்டிருக்கும் வங்கிகளில் கை வைக்காமல் உழைக்கும் மக்களின் சொற்ப சேமிப்புகளின் மீது தான் அரசாங்கம் கை வைத்துள்ளது. மொத்தத்தில் வெளிநாட்டு பணமுதலைகளையும் உள்நாட்டு பணமுதலைகளையும் திருப்திப்படுத்துவதற்காக உழைக்கும் மக்களின் சேமிப்பை பலிக்கடா ஆக்கியிருக்கிறது ரணில் அரசாங்கம்.

சிறிலங்கா அரசின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் DDR செய்த மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது தனித்தன்மையானது. அதாவது இந்த திட்டம் நீண்ட கால சேமிப்பு நிதிகளிடம் இருந்து அரசு வாங்கிய கடன்களை மறுசீரமைப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறது. இதுவரை 12 நாடுகளில் நடந்த DDR நிகழ்வுகளை விபரிக்கும் **IMF** ஊழியர்களின் அறிக்கைகளின் அடிப்படையில், வேறு எந்த நாடும் இத்தகைய வகையில் தொழிலாளர்களின் நீண்டகால சேமிப்பில் கை வைக்கவில்லை.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை (நன்றி: publicfinance.lk) இதனை தெளிவாக விளக்குகிறது. இதிலுள்ள அனைத்து 12

## Country Comparison Of Perimeters Of Debt Restructuring

| Country | Timeline | Parties targeted for Domestic Debt Restructuring |
|---|---|---|
| Grenada | (2013-2015) - DDR+EDR | Banking Sector; Private creditors; Public Pension Fund* |
| Ghana | (2022-Present) - DDR +EDR | |
| Greece | (2011-2012)- EDR + DDR | Banking Sector; Private creditors |
| Barbados | (2018 -2019) - EDR + DDR | |
| Jamaica | (2010)- DDR | |
| Russia | (1998-2000)- DDR + EDR | |
| Ukraine | (1998-2000)- DDR +EDR | |
| Uruguay | (2003)- DDR +EDR | |
| Argentina | (2018-2023)- EDR+DRR | |
| Nicaragua | (2008)- DDR | Banking Sector |
| St. Kitts and Nevis | (2011-2012)- EDR +DDR | |
| Cyprus | (2013)- DDR | |

Source: IMF Staff Report - Issues In Restructuring Of Sovereign Domestic Debt | available at: Issues in Restructuring of Sovereign Domestic Debt (imf.org)
*Note: Data for Ghana was sourced from the Ministry of Finance of Ghana's official documents. While the April 2023 investor presentation excluded pension funds, the Ministry's press release on 31st July 2023 confirmed their inclusion in the debt restructuring framework.

All Rights Reserved © 2023
Verité Research

DDR திட்டங்களும் வங்கித் துறையின் கடன்களை மறுசீரமைப்பு செய்துள்ளன. 75% ஆன திட்டங்கள் தனியார் கடன்களை மறுசீரமைத்துள்ளன. ஆனால் அவற்றில் எதுவுமே அவர்களின் ஓய்வூதிய நிதியை மட்டும் குறிவைக்கவில்லை. கிரெனடா மற்றும் கானா மட்டுமே பொது ஓய்வூதிய நிதியை அவற்றின் மறுசீரமைப்பில் சேர்த்தன. ஆனால், அவை இந்த நிதிகளை மட்டும் இலக்கு வைக்கவில்லை. இந்த நிதிகள் அந்த நாடுகளின் பல இலக்குகளில் ஒன்றாக இருந்தன. சிறிலங்கா மட்டுமே ஓய்வூதிய நிதியங்களை மட்டும் இலக்கு வைத்துள்ளது.

மறுபுறத்தில், சிறிலங்காவின் அணுகுமுறை தனியார் பிணைமுறிப் பத்திரதாரர்கள், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களை DDR இல் உள்ளடக்குவதிலிருந்து விலக்கு அளிக்கிறது. ஆனால், வெளிநாட்டு கடன்களை பொறுத்தவரை அவற்றின் மறுசீரமைப்பில் பொதுவாக வெளிநாட்டு வங்கிகள், தனியார் பிணைமுறிப் பத்திரதார்ரகள் ஆகியோரை உள்ளடக்குகிறது. இதனைப் பார்க்கும் பொழுது சிறிலங்காவின் DDR என்பது தொழிலாளர்களின் ஓய்வூதியத்தை எடுத்து உள்ளூர் வங்கிகளுக்கும் தனியார் பிணைமுறிப் பத்திரதாரர்களுக்கும் கொடுப்பதற்கு சமனானது.

அரசாங்கம் EPF மீது கை வைப்பதை இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் எல்லோரும் தமது அரசியல் முரண்பாடுகளைத் தாண்டி ஒன்றாக கை கோர்த்து எதிர்க்க வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இங்கிலாந்தின் பிரதமரான கிளெமென்ட் அட்லீ (Clement Attlee) இன் அரசாங்கம் அங்கிருந்த நிறுவனங்களை தொடர்ச்சியாக சுவீகரிப்பதை வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) எவ்வாறு ஆக்கிரோசமாக எதிர்த்தாரோ அவ்வாறு நாங்களும் எதிர்க்க வேண்டும் என்கிறார் பொருளாதார நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல். இவர் வெரிட்டே ஆய்வு (Verité Research) நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனராக பணிபுரிகிறார். கலாநிதி நிஷான் டி மெல் ஆடி மாதம் 6 ஆம் திகதி டெய்லி மிரர் (Daily Mirror) ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

### வின்ஸ்டன் சர்ச்சிலின் உள்ளுணர்வு போல EPF ஐ பாதுகாப்போம்

அரசியல்வாதிகள், தனியார் மற்றும் அதிகாரத்துவத்தினர் ஒன்றிணைந்து சதி செய்வதன் மூலம் EPF இலிருந்து பெரும் இலாபம் ஈட்டுவதற்கு சாத்தியக்கூறுகளை கண்டுபிடித்துள்ளமை இலங்கை தொழிலாளர்களை பொறுத்தவரை அபாக்கியமானது. தமது செயல்களை ஒளித்தும் தரவுகளை மறைப்பதன் மூலமும் இதனை அவர்கள் செய்கிறார்கள்.

சிறிலங்காவின் தெருக்களில் வீதிகளில் பெண்கள் தொடர்ந்தும் தொல்லைப்படுத்தப்படு

வதை நாம் அறிவோம். அந்தப் பெண்களை பாதுகாக்கும் சட்டத்தை இயற்றுவதை விடுத்து அவர்களை மேலும் தொல்லைப்படுத்த ஆண்கஞக்கு வெளிப்படையான அனுமதி வழங்கும் சட்டத்தை இயற்றுவது நியாயமாகுமா? கடந்த காலத்தில் **EPF** துஷ்பிரயோகம் செய்யப்பட்டதனால் தற்போதைய உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிலும் அத்துஷ்பிரயோகத்தை செய்ய முடியும் என்று சொல்வது போல் இருக்கிறது இன்றைய **DDR** திட்டத்தை நியாயப்படுத்துபவர்களின் வாதம்.

இலங்கையின் தனியார் துறை ஊழியர்கள் ஒவ்வொரு மாதமும் அவர்களது வருமானத்தில் 23% வருமானத்தை ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றிற்கு கட்டாயமாக செலுத்த வேண்டும் என்பது சட்டம். **EPF** ஆனது இலங்கை மத்திய வங்கியின் (CBSL) சிறப்புப் பிரிவினால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் CBSL இன் நாணயச் சபையானது நிதியத்தை நடத்துவதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பை ஏற்கும்.

பிணைமுறி பத்திரப் பரிவர்த்தனைகள் மற்றும் **EPF** நிதிகளின் துஷ்பிரயோகம் குறித்து ஆராய மத்திய வங்கியால் தடயவியல் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்காய்வுகள் பங்குனி 2015 க்கு முன்னர் நடந்த பரிவர்த்தனைகளை மட்டுமே ஆராய்ந்தன. அதற்கு பின்னர் நடந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளில் பிணைமுறி ஊழலுக்கும் (bond scandal) **EPF** இற்கும் ஒரு வகை தொடர்பு இருந்துள்ளமை பாராளுமன்ற அமர்வுகளின் போது தெரிய வந்தது.

2019 இல் வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் தடயவியல் கணக்காய்வு அறிக்கை 3, மத்திய வங்கியின் கூட்டுப் பொறுப்பின்மை மற்றும் ஊழலினால் **EPF** க்கு ஏற்பட்ட பெரும் இழப்புகளை வெளிப்படுத்தியுள்ளது. இது சம்பந்தமாக இன்றுவரை எந்த ஒரு வழக்கும் தொடுக்கப்பட்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை.

### தரவுகளை ஒளித்து பிணைமுறி ஊழல் மறைக்கப்பட்டுள்ளது

அந்த “பிணைமுறி ஊழலின்” முழுப் பரிமாணம் மற்றும் **EPF** இற்கு நடந்து இருக்கக்கூடிய துஷ்பிரயோகம் ஆகியற்றை **EPF** இன் சந்தை பரிவர்த்தனைகள் பற்றிய தகவலைப் பெறுவதன் மூலம் மட்டுமே கண்டறிய முடியும். ஆனால், மத்திய வங்கி, 2017 ஆம் ஆண்டு முதல் இந்த தரவுகளை பகிர்ந்து கொள்ள பிடிவாதமாக மறுத்துள்ளது. இலங்கையின் தகவலறியும் உரிமை ஆணைக்குழு (RTI) 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இத் தகவல்களை பகிர்ந்து கொள்ளச் சொல்லி மத்திய வங்கிக்கு எதிராக வலுவான தீர்ப்பு வழங்கியிருந்த போதிலும் இதுவரை அது நடைபெறவில்லை.

இன்று **EPF** இல் 3.4 டிரில்லியன் ரூபாய்கள் உள்ளன. இது இதுவரை இலங்கையில் இருந்த நிதியங்களில் மிகப் பெரிய நிதியமாகும். **EPF** இன் 0.01% போன்ற ஒரு சிறிய சதவீதத்தை கூட பிரித்தெடுப்பதன் ஊடாக கோடிகளின் சொந்தக்காரர் ஆகலாம். தனியார்கள், அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரத்துவத்தினர் ஒன்றிணைந்து **EPF** இலிருந்து இலாபம் ஈட்டக்கூடிய பெரும் சாத்தியக் கூறுகளை கண்டறிந்துள்ளமை இலங்கை தொழிலாளர்களைப் பொறுத்தவரை துரதிர்ஷடவசமானது.

### வின்ஸ்டலின் சர்ச்சில் உள்ளுணர்வு EPF ஐ காப்பாற்றும்

Business Insider எனும் பத்திரிகையில் வின்ஸ்டன் சர்ச்சில் தொடர்பாக வந்த ஒரு கதை இங்கு பொருத்தமாக இருக்கும். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்னர் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த தொழிற்கட்சியை சேர்ந்த கிளெமென்ட் அட்லீ இலாபம் கொளிக்கும் பெரிய பெரிய தனியார் நிறுவனங்களை அரசுடைமையாக்கிக் கொண்டிருந்தார். ஒருநாள் கழிப்பறையில் அட்லீ சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த பொழுது சர்ச்சிலும் சிறுநீர் கழிக்க அங்கு வந்தார். அவர் அட்லீ நின்று கொண்டிருந்த கழிப்பிடத்துக்கு வெகுதூரத்தில் இருந்த இடத்துக்கு சென்று சிறுநீர் கழிக்கத் தொடங்கினார். இதனைப் பார்த்த அட்லீ “என்ன இன்றைக்கு மற்றவர்களிடமிருந்து தனித்து நிற்கப் பார்க்கிறீர்களா?” என்று அவரிடம் கேட்டார். அதற்கு சர்ச்சில் “நீங்கள் பெரிதான எதைக் கண்டாலும் அரசுடைமை ஆக்கப்

பார்க்கிறீர்களே. அதனால்தான் நான் தள்ளி நின்று அதனை மறைக்கப் பார்க்கிறேன்." என்று பதிலளித்தார்.

அந்த சர்ச்சிலின் கிண்டலிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியது ஏதேனும் இருக் கும் என்றால், அது நிச்சயமாக **EPF** க்கும் பொருந்தும். **EPF** மிகவும் பெரியதாக இருப் பதால் அதற்கு பாதுகாப்பு இல்லை. **EPF** ஐப் பாதுகாப்பதற்கு மிக உயர்ந்த அளவிலான முய ற்சி தேவைப்படும்: அதாவது அதிக தரவுக ளின் வெளிப்படைத்தன்மை, நேரம் தவறாமல் செய்யப்படும் தடயவியல் கணக்காய்வுகள், மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப் பான முதலீட்டுக் குழு மற்றும் அதன் ஒட்டு மொத்த செயல்திறன் பற்றிய அளவீடுகளும் அவற்றின் போக்கு தொடர்பான அறிக்கைக ளும் முக்கியமானவை. உள்நாட்டு கடன் மறுசீர மைப்புக்கான தற்போதைய **EPF** தொடர்பான திட்டம் சர்ச்சிலின் அச்சத்தை கூர்மையான கவனத்திற்கு கொண்டு வருகிறது.

**மத்திய வங்கி கடமையிலிருந்து தவறியமை**

1958 ஆம் ஆண்டு **EPF** இன் சட்டத்தை உருவாக்கியவர்கள், அப்பொழுதே அனைத்து தொழிலாளர்களின் ஓய்வூதிய சேமிப்புகள் அனைத்தும் ஒரே இடத்தில் சேகரிக்கப்படும் போது, அதன் மீது கை வைக்க அரசாங்கத் துக்கு ஏற்படக்கூடிய மனச் சலனங்கள் பற்றி யோசித்திருந்தார்கள். அவர்கள் **EPF** இல் முழு அளவிலான வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்று சட்டத்தில் எழுதினார்கள். வெளிப்படைத்தன்மை தொடர்பான பல உட் பிரிவுகளில், **EPF** செய்யும் "ஒவ்வொரு முத லீட்டின் மதிப்பு, கொள்முதல் விலை மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றைக் காட்டும் முத லீட்டு அறிக்கையை" **EPF** பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறினர். ஆனால் மத்திய வங்கி நீண்ட காலமாக இந்த சட்டத் தேவையை நிறைவு செய்யத் தவறி விட்டது. 2018 இல் இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் மத்திய வங்கிக்கு எதிரான தீர்ப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போதில் இருந்து, மத்திய வங்கி ஒரு படி மேலே சென்று, அந்த சட்டத் தேவையை அதன் சமீபத்திய நிதிநிலை அறிக்கைகளில் தவறாக சித்தரித்துள்ளது. அதாவது "ஒவ்வொரு முதலீடு" என்ற வார்த்தையை "ஒவ்வொரு வகை யான முதலீடு" என்று சித்தரித்து முதலீடுகளின் ஒட்டுமொத்தமான புள்ளி விபரங்களை மட்டும் வெளியிடத் தொடங்கியது. அதனூடாக **EPF** நிதியின் துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்தி இருக்கக்கூடிய தகவல்களை மறைத்தது. இந்த துஷ்பிரயோகம் 2019 ஆம் ஆண்டின் தடயவியல் கணக்காய்வின் தணிக்கை மூலம் கண்டறியப்பட்டது.

**EPF** வருடாந்தர அறிக்கைகள் கூட பல வருடங்கள் காலதாமதாகி உள்ளன. 2022 மார்கழியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்கும் வரை, ஆண்டு அறிக்கைகள் குறைந் தது ஐந்து ஆண்டுகள் தாமதமாகி இருந்தன. 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கைகள் மார்கழி 2022 இலேயே வெளியிடப்பட்டன. மேலும் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை 2023 இல் மட்டுமே வெளியிடப்பட்டது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை (ஆனால் அந்த ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளன).

**2023 இன் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணைகள்**

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை சிறி லங்கா அரசாங்கம் உள்நாட்டு கடன் மேம் படுத்துகை (Domstinc Debt Optimization, DDO) என்ற பெயரில் இனிப்புத் தடவி நடை முறைப்படுத்த முனைந்துள்ளது. உலகில் வேறு எங்கும் இந்தச் சொற்களை நாம் கண்டதில்லை. இந்த முன்மொழிவின் பகுப்பாய்வு வெரிடே ஆய்வு நிறுவனம் (Verité Research) மூலம் வெளியிடப்படும் கடன் நிலவர அறிக்கையில் வரவிருக்கிறது. அந்த பகுப்பாய்வின் சாராம்சம் இதுதான்: உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் மொத்த சுமையையும் இனிவரும் 16 ஆண்டுகளு க்கு, 2038 ஆம் ஆண்டு வரை, **EPF** இன் தற் போதைய மற்றும் எதிர்கால ஓய்வூதிய சேமிப் பின் மீது சுமத்துவதற்கு இந்த பிரேரணை முன் மொழிகிறது.

இது மிகவும் வழக்கத்திற்கு மாறான திட்டமாகும். ஏனெனில் இது DDR இன் முழு செலவையும் சமூகத்தின் மீது திணிக்கிறது. மேலும் வங்கிகளின் பங்குதாரர்களுக்கும் தனி

யார் பிணைமுறிப் பத்திர சொந்தக்காரர்களுக்கும் குறுகிய காலத்தில் விண்ணைத் தொடக்கூடிய இலாபங்களை அடைய அனுமதிக்கிறது. ஏனெனில் அவர்கள் வைத்திருக்கும் அரசாங்கப் பிணைமுறிப் பத்திரங்கள் ஏற்கனவே DDR இற்கான செலவை உள்ளடக்கி இருக்கின்றன. DDR இற்கான செலவை அவர்களிடம் இருந்து பெறாமல் EPF இன் தலையில் கட்டுவதன் மூலம் அவர்களின் பிணைமுறிப் பத்திரங்கள் பெருமளவான தனியார் ஆதாயத்தை அவர்களுக்கு கொண்டு வரும்.

அரசாங்க பிணைமுறிப் பத்திரங்களை அதிகூடிய அளவில் வாங்குவது EPF ஆகும். அரசாங்கத்தால் விற்கப்பட்ட மொத்த பிணை முறிப் பத்திரங்ளில் சுமார் 36% EPF ஆல் வாங்கப்பட்டுள்ளது. மேலும் EPF இன் முதலீடுகளில் 90% க்கும் அதிகமானவை அரசாங்க பிணைமுறிப் பத்திரங்களில் முதிலிடப்பட்டுள்ளன. EPF தொழில் ரீதியாக நிர்வகிக்கப்பட்டால், அதன் ஒட்டுமொத்த முதலீடுகளின் சராசரி வருமானம் அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட ஒட்டு மொத்த பிணைமுறிப் பத்திரங்களிலிருந்து வரக்கூடிய சராசரி வருவாய்க்கு சமமாக அல்லது அதிகமாக இருக்கும். ஏனெனில், பிணைமுறிப் பத்திரங்களின் வருவாய்ப் போக்கு பொதுவாக மேல்நோக்கியதாக இருப்பதுடன் நீண்டகால சேமிப்பு நிதியமான EPF நீண்ட கால முதிர்ச்சியுடைய பிணைமுறிப் பத்திரங்களை தனது முதலீட்டில் அதிக விகிதத்தில் வைத்திருக்க முடியும்.

### EPF இன் இன்றைய தொகைக்கு 2038 ஆம் ஆண்டு வரை ஏற்படக்கூடிய இழப்பை கணக்கிடுதல்

2021 ஆம் ஆண்டில், CBSL அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட மொத்த பிணைமுறிகள் பற்றிய தரவை வெளியிடத் தொடங்கியது. 2023 வைகாசி இறுதியில், அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகளிலிருந்து சந்தையில் கிடைக்கும் சராசரி வருமானம் 13.52% ஆக இருந்தது. அதிக வருவாய் ஈட்டும் பிணை முறிப் பத்திரங்கள் (20% க்கு மேல்) நீண்ட கால முதிர்ச்சியுடன் பிணைக்கப்பட்டிருந்தன. 2027-2030 க்கு இடையில் முதிர்ச்சியடையும் பத்திரங்களின் சராசரி வருவாய் 14.52% ஆகும். 2031 மற்றும் 2034 க்கு இடையில் முதிர்ச்சியடையும் பத்திரங்களின் சராசரி வருவாய் 14.43% ஆகும். 2026 க்கு முன் முதிர்ச்சியடையும் பத்திரங்கள் தான் 12.65% குறைந்த சராசரி வருவாயை கொண்டுள்ளன.

இந்த 13.52% கூட்டு வருவாய் விகிதத்தில், தற்போதைய EPF இன் பெறுமதி 2038 இல் 25.7 டிரில்லியன் ரூபாய்களாக வளரும். ஆனால் இன்று DDR இன் கீழ் பிரேரிக்கப்பட்டிருக்கும் சராசரி வட்டி வீதமான 9.1% இல் தற்போதைய EPF இன் பெறுமதி 13.6 டிரில்லியன் ரூபாய்களாக மட்டுமே வளரும். இந்த இரண்டு வளர்ச்சிப் பாதைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் 12.1 டிரில்லியன் ரூபாய்கள் ஆகும். 2038 ஆம் ஆண்டு இருக்கக் கூடிய 13.6 டிரில்லியன் ரூபாய்களை 13.52% கூட்டு வட்டி விகிதத்தில் பின்னோக்கி கணக்கிட்டுப் பார்த்தால் அதன் தற்போதைய மதிப்பு 1.6 டிரில்லியன் ரூபாய்கள் ஆகும். இது தற்போதைய EPF இன் மதிப்பாகிய 3.4 டிரில்லியன் ரூபாய்களின் 47% மட்டுமே. தேர்தலை நடத்தவிடாமல் தடுக்கும் அரசியல் தலைமை EPF இன் தலைவிதியை தீர்மானிக்கும் பட்சத்தில் இதுதான் நடக்கும்.

மேலே உள்ள இழப்பின் கணக்கீடு, அடுத்த 16 ஆண்டுகளில் அரசாங்கத்தின் கடன் பங்குகளுக்கான சராசரி செலவை மதிப்பிடுவதிலிருந்து செய்யப்பட்டது. (அரசாங்கத்தின் இந்த சராசரி செலவு EPF இன் சராசரி வருமானமாக இருக்க வேண்டும், இன்னுமொரு பிணைமுறி ஊழல் நடக்காமல் இருந்தால்). ஆனால் இலங்கையில் வட்டி விகிதங்கள் சக்கரம் போல சுழல்கின்றன. அந்தவகையில் 2038 வரையிலான முழுநேரக் காலத்தைப் பார்க்கும் போது தற்போதைய கணிக்கப்படும் சராசரி வட்டி விகிதம் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம். ஏனென்றால், கடன் மறுசீரமைப்பு அத்தியாயத்திற்குப் பிறகு நீண்ட கால வட்டி விகிதங்கள் நீண்ட காலத்திற்கு (கடந்த காலத்தை விட) உயர்த்தப்படும். இரண்டு காரணங்களுக்காக உள் மற்றும் வெளிநாட்டு நீண்ட கால கடன் வழங்குனர்கள் சிறிலங்காவை அதிக இடர் உள்ள நாடு என்ற வகைக்குள் வைத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. முதலாவதாக, பொருளாதாரத்தில் ஸ்திர நிலையை அடைவதற்கு முன்னர் நாடுகள் சராசரியாக ஒன்றுக்கு மேற்பட்ட முறை கடனை

> **ஆண்டு அறிக்கைகளை வெளியிடாமல், கணக்கீடு அனுமானங்களைக் காட்டாமல், அதன் DDR திட்டத்தினால் EPF இன் தற்போதைய மதிப்புக்கு ஏற்படும் இழப்பை தெரிவிக்காமல் மத்திய வங்கி EPF ஐ மட்டுமே குறிவைக்கிறது**

மறுசீரமைக்கின்றன – சிறிலங்காவின் ஆட்சி முறை அது இன்னொரு முறை கடன் மறுசீரமைப்பு நடக்கும் அபாயம் உள்ள நாடாக காட்டி நிற்கிறது. இரண்டாவதாக, தற்போதைய கடன்களை நிர்வகிக்கும் கட்டமைப்பானது 2032 ஆம் ஆண்டை தாண்டி பார்க்கவில்லை. முன்மொழியப்பட்ட தீர்வு பாதையானது, அதிகளவான கடன்களை திருப்பிச் செலுத்தும் காலத்தை 2033-2038 இற்கு தள்ளிப் போடுவது போல தெரிகிறது. அதன்மூலம் அக்கால கட்டத்தில் அதிகளவு பொருளாதார அழுத்தம் வரும்.

## ஊழலும் அநீதியும் பொருளாதார மீட்சிக்கு வழிகள் அல்ல

சர்ச்சில் பயப்பட்டது போல இது தேசியமயமாக்கல் பயம் அல்ல. ஆனால் ஊழல் மற்றும் அநீதியிலிருந்து EPF க்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் EPF துஷ்பிரயோகம் செய்யப்பட்டு அதனிலிருந்து கிடைக்கும் வருவாய் குறைந்து போனது என்ற விடயம் இப்போது பரவலாக விவாதிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் கடன் பற்றிய கடந்த கால தரவுகள் முற்றாக வெளியிடப்பட்டால் மட்டுமே அந்த குறைவை சரியாக கணக்கிட முடியும். ஆனால் கடந்த காலத்தில் நடந்த துஷ்பிரயோகம் அடுத்த 16 ஆண்டுகளுக்கு நிரந்தரமான முறையில் தொடரலாம் என்று சொல்லி அந்த துஷ்பிரயோகத்தை தொடருவதை நியாயப்படுத்த முடியாது. அதனைத் தான் முன்மொழியப்பட்ட DDR செய்ய நினைக்கிறது. எப்படியிருந்தாலும், அந்த கடந்தகால முறைகேட்டையும் அவசரமாக கண்டுபிடித்து சரி செய்வதற்கான ஒரு வாதமாக அல்லவா அது முன்வைக்கப்பட வேண்டும்?

இலங்கையில் வீதிகளில் பெண்கள் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்படுவதை நாம் அறிவோம். அது பெண்களை துஷ்பிரயோகம் செய்ய ஆண்களுக்கு வெளிப்படையான அனுமதி வழங்கும் சட்டத்தை இயற்றுவதை நியாயப்படுத்துமா? EPF இன் கடந்தகால துஷ்பிரயோகம் தற்போதைய DDR திட்டத்தை நியாயப்படுத்துகிறது என்று கூறுபவர்களால், EPF தொடர்பாக இப்போது அந்த வகையான வாதத்தை முன்வைப்பது போல் தான் தெரிகிறது. முக்கியமான முதலீட்டுத் தரவுகளை தொடர்ந்து மறைத்துக் கொண்டு, ஆண்டு அறிக்கைகளை வெளியிடாமல், கணக்கீடு அனுமானங்களைக் காட்டாமல், அதன் DDR திட்டத்தினால் EPF இன் தற்போதைய மதிப்புக்கு ஏற்படும் இழப்பை தெரிவிக்காமல் மத்திய வங்கி EPF ஐ மட்டுமே குறிவைக்கிறது. அடுத்த 16 ஆண்டுகளில் மக்களின் ஓய்வூதியச் சேமிப்பின் பெரியதொரு பங்கை விழுங்கி ஏப்பமிட முனைகிறது.

நான் உலகில் பார்த்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புளில் மிகவும் வழக்கத்திற்கு மாறான திட்டம் இதுவாகும். தங்கள் வருமானத்தில் பெரும் பகுதியை அரசுப் பத்திரங்களில் ஓய்வூதியச் சேமிப்பாக வைப்பதைத் தவிர வேறு வழியில்லாத உழைக்கும் மக்கள் மீது இது முழுச் சுமையையும் ஏற்றுகிறது. அதேவேளை அரசாங்க பிணைமுறிப் பத்திரங்களில் முதலீடு செய்வதில் உள்ள ஆபத்துக்களை அறிந்து கொண்டு அதற்கேற்ப அரசாங்கம் கொடுக்க முனைந்த அதிக வட்டி வீதத்தை கொண்ட பிணைமுறிப் பத்திரங்களை வாங்கிய உள்நாட்டு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் மலையளவு இலாபத்தை ஈட்டப் போகின்றன.

அட்லீயிடம் இருந்து தள்ளி நிற்பதற்கு சர்ச்சிலுக்கு ஒரு நல்ல காரணம் இருந்தது. அதே காரணத்திற்காக, மத்திய வங்கி மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் தலைமையிலிருந்து EPF பற்றி முடிவெடுக்கும் அதிகாரத்தை நாம் பறிக்க வேண்டும்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)

சென்று பிரசாதம் படைப்பதுவும் உண்டு என்றனர் மன வருத்தத்துடன்.

இக் கிராமத்தினருடைய வயல் காணிகள் பெரும்பாலும் சிங்களவர்கள் எடுத்து விட்டார்கள் மிகுதியாக எஞ்சியிருக்கும் வயல், காணிகளையாவது பாதுகாக்க வேண்டும் என்று அங்கிருப்பவர்கள் போராடிக் கொண்டிருக்கின்ற வேளையில், புல்மோட்டை அரிசிமலை விகாரையின் பௌத்த பிக்கு 160 ஏக்கர் அளவிலான காணிகளை "பூஜா பூமி" எனும் பெயரில் விகாரைக்கு சொந்தமாக்க மரங்களை வெட்டி துப்பரவு செய்து கொண்டு வருகிறார். இந்த காணிகள் தமிழ் மற்றும் சிங்கள மக்களிற்கு சொந்தமானவை.

ஏற்கனவே விவசாய காணி, வயல் காணி அபகரிப்பு, அடிப்படை வசதியின்மை, பாடசாலை ஒழுங்காக இயங்குவதில்லை, என்று பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற கிராமத்தவர்களுக்கு அரிசிமலை பிக்குவின் ஆக்கிரமிப்பு மேலும் நெருக்கடியை கொடுத்து இருக்கிறது. இது தொடர்பாக தென்னவன் மரவடி கிராமத்தவர்கள் மேலும் தெரிவித்தவற்றை தருகிறோம். முதலில் சண்முகநாதன் என்ற பெயருடைய கிராமவாசி தெரிவித்தது.

எங்களது கிராமம் 300, 400 வருடங்களுக்கு முற்பட்ட கிராமம். நாங்கள் 1984 இல் இடம் பெயர்ந்து 2010 இல் மீள குடியேறினோம். நாங்கள் இந்த கிராமத்தை தொடர்ந்தும் எமது பூர்வீகமாக வைத்திருக்க வேண்டும் என்று தான் எவ்வளவோ முயற்சி எடுக்கிறோம். ஆனாலும் எங்களுடைய மக்களின் ஆதரவு போதாமல் இருப்பதனாலும் ஒத்துழைப்பின்மையாலும் இந்த கிராமம் பறி போகக் கூடிய நிலைமையில் இருக்கின்றது. சர்வதேச நாடுகளில் இருக்கின்ற புலம்பெயர் மக்கள் எங்களது முயற்சிகளுக்கு ஆதரவு தர வேண்டும். அத்தோடு எங்களது கிராமத்திலே பிறந்து வளர்ந்த மக்களும் ஒன்றிணைய வேண்டும். மக்களின் வரவின்மையால் எங்களுடைய வயல் காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. எனினும் இன்னும் எஞ்சிய சில பகுதிகளுக்காக நாங்கள் வழக்கு போட்டு போராடி கொண்டிருக்கிறோம்.

இவ்வாறாக வாழ்ந்து கொண்டு வருகின்ற காலப்பகுதியில் தற்போது அரிசிமலை பிக்குவினால் பணிக்கவயல் சந்தியில் அமைந்துள்ள காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. நாங்கள் அறிந்த காலங்களில் இராணுவம் இருந்தது. தற்காலிகமாக இறை வணக்கம் செலுத்துவதற்கென அங்கு சிறிய புத்தர் சிலை வைத்திருந்தார்கள். பின்னர் யுத்தம் முடிந்து எல்லாம் மூடுபட்டதற்கு பின்னர் அதிலே அடையாளமோ சிலையோ இருக்கவில்லை. கடந்த 4, 5 வருடங்களுக்கு முதல் அரிசிமலை பிக்கு இங்கு வருகை தந்து தங்களுடைய மக்களுக்கு இந்த காணி கொடுக்கப்பட்டுள்ளது என்று அளந்தார். எங்களால் ஒன்றுமே செய்ய இயலாத நிலைமையில் இருந்தோம்.

இப்போது மக்களுக்கு தெரியாத நிலையில் மிகுதி காணியும் அரிசிமலை பிக்குவினால் இயந்திரங்கள் மூலம் துப்பரவு செய்யப்படுகின்றது. இந்த காணி முக்கியமாக முல்லைத்தீவு - திருகோணமலைக்கு சென்று வருகின்ற பாதையோடு இருக்கிறது. இந்த 160 ஏக்கரையும் "முன்னர் புத்தர் சிலை இருந்த இடம், அது எங்களுக்குரிய புனித பூமி" என்ற அடிப்படையில் முழுமையாக துப்பரவு செய்து எடுப்பதற்கு திட்டம் போட்டிருக்கிறார். இந்த காணியில் பெரும்பான்மை இனத்தவர்களின் காணியும் உள்ளடங்குகிறது. அதனால் அவர்களும் எங்களோடு சேர்ந்து அரிசிமலை பிக்குவின் அடாவடித்தனத்தினை தடுத்து நிறுத்த வேண்டும் என்று செயற்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பி இருக்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன் ஐயாவிற்கும், சுமந்திரனிற்கும், சாணக்கியனிற்கும், ஆளுநர் செந்தில் தொண்டமானிற்கும் அறிவித்திருக்கிறோம். மேலதிகமாக வனவள திணைக்களத்திற்கும் அறிவித்திருக்கிறோம். அவை எங்களது காணிகள் என்பதற்கான ஆதாரங்கள் எல்லாம் கொடுத்து இருக்கிறோம். சிங்கள மக்களும் எங்களோடு ஒத்துழைப்பு தந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தும் நாங்கள் மேற்கொண்டு எதுவும் செய்ய இயலாதவர்களாக இருக்கிறோம்.

எங்களின் கிராமத்தின் பூர்வீகம் அநேகமானோருக்கு தெரியும். வேளாண்மையோ, விவசாயமோ எந்த தொழிலையும் செய்ய கூடிய வளமுடைய கிராமம். தண்ணீர் வசதிகளும் ஒழுங்காக கிடைக்கின்ற இடம். ஆனால் ஒரு பகுதி மக்கள் தான் எமது பாரம்பரிய கிராமத்தை விட கூடாது, இது எங்களின் எல்லையில் இருக்கின்ற கிராமம், இதனை விட்டுக்கொடுத்தால் தமிழ் மக்களாகிய எங்களது பாரம்பரியமே போய்விடும்,

அடையாளமே பறி போய்விடும் என்று விடாப்பிடியாக இருக்கிறோம். எங்களுடைய கிராம மக்கள் இங்கு வராமல் இருப்பது பிரதான பிரச்சனையாக இருக்கிறது. எங்களுக்கு எங்கள் மக்களினது ஒத்துழைப்பு போதாமல் இருக்கிறது.

நான் எனது 15 ஏக்கர் காணியை ஆதாரத்தை வைத்துக்கொண்டு சிங்கள மக்களுடன் நேரடியாக வாதாடி எடுத்துள்ளேன். இப்போதும் கூட எனது ஒரு காணிக்கு ஆதாரத்தை வைத்து மூன்று வருடங்களாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எனது முயற்சிக்கு ஆதரவாக நிற்க எங்கள் மக்கள் இல்லை. காணி பறி போகாமல் தடுப்பதற்கு காணிக்குரிய சொந்தக்காரர் இல்லை. சொந்தக்காரர்களில் பலர் யுத்தத்தில் இறந்து இருக்கிறார்கள். அவ்வாறு இறந்தவர்களின் பிள்ளைகளுக்கு இங்கு வரக்கூடிய தன்மையும் இல்லை. இது பிக்குவுக்கு சாதகமாக போய்விட்டது.

இன்னுமொரு கிராமவாசி தகவல் தெரிவிக்கும் பொழுது, அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டு எங்களில் 62 பேருக்கு முதலில் காணி அனுமதிப்பத்திரங்கள் வந்தன. அப்பொழுது மாகாண காணி ஆணையாளர் சிங்களவர்களுக்கு 2 ஏக்கர் விகிதம் கொடுக்கும்படி எங்களிடம் கேட்டார். நாங்கள் எங்களுக்கு காணி போதாமல் இருக்கிறது, ஆகவே காணி கொடுக்க முடியாது என்று சொன்னோம். ஆனால் அவர் கச்சேரிக்கு சென்று எங்கள் 62 பேரினது அனுமதிப்பத்திரங்களையும் இரத்து செய்வதற்கு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி விட்டார் என்று சொன்னார்கள். இது 2013 ஆம் ஆண்டு நடந்தது. தென்னவன் மரவடி கிராமத்திற்கு விழுந்த முதலாவது அடி இது. இதுவரையில் எங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் தரவில்லை.

அடுத்து இரண்டாவது அடியாக கந்தசுவாமி கோவிலடியில் நான்கு பேரிற்கு கொடுக்கப்பட்டிருந்த காணிகளை ஒரு பிக்கு தன்னிச்சையாக எல்லைக் கல் போட்டு இது தொல்பொருளுக்கு உரிய இடம், இதற்குள் யாரும் போக கூடாது என்று சொல்லி தன்வசம் வைத்திருக்கிறார். மூன்றாவதாக, தென்னவன் மரவடி மக்களினுடைய காணியை பெரும்பான்மை இன மக்களுக்கு கொடுப்பதற்காக ஆயத்தப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பல இடங்களுக்கும் அறிவித்தமையால் தற்போது அது நிறுத்தப்பட்டு இருக்கிறது.

இப்படியான நிலைமையில் எங்களுக்கு காணி இல்லை. வயல் காணிகள் இன்னும் சிங்கள ஆட்களின் வசம் இருக்கிறது. முழுதாக விடப்படவில்லை. இதனை எடுத்து தருவதற்கு ஒரு அரசாங்க அதிகாரிகளும் முனைவதில்லை. காணி பிரச்சனையை தீர்க்க வேண்டியது பிரதேச செயலகம் தான். நாங்கள் பல தடவைகள் அறிவித்தும் இதுவரையில் எடுத்து தரவில்லை. தயாபரன் என்று பிரதேச செயலாளர் ஒருவரை நியமித்தார்கள் அவர் கொஞ்ச காணிகளை எடுத்து தந்தார். உடனேயே அவரை இடமாற்றம் செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு சதீஸ்வரன் என்று ஒரு பிரதேச செயலாளர் வந்தார். அவர் எந்தவொரு காணிகளையும் பெற்று தரவே இல்லை. இப்பொழுது புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரிடம் நாங்கள் இன்னும் கதைக்கவில்லை.

பிரதேச செயலகம் தான் காணி பிரச்சனையை தீர்க்க வேண்டும். நாங்கள் வேறு யாரிடம் போவது? எங்களை ஏமாற்றுகிறார்கள். இதனால் வெளி மாவட்டங்களில் இருக்கின்ற இந்த ஊரின் மக்கள் இங்கு மீள குடியேறுவதற்கு பயப்படுகிறார்கள். காணி பிரச்சனை ஒரு பக்கத்தால் ஆக்கிரமிப்பு மற்றொரு பக்கத்தால் நடக்கிறது. இங்கு பாடசாலையை கூட ஒழுங்காக நடத்த முடியாமல் இருக்கிறது. எங்களுடைய பிள்ளைகளும் வெளி மாவட்டங்களில் தங்கி நின்று படிக்கிறார்கள். அவர்களுக்கான போக்குவரத்து செலவு, உணவிற்கான செலவு, அவர்களின் தனிப்பட்ட செலவு என்று இருக்கிறது. இவர்களின் காணி அபகரிப்பு பிரச்சனைகளால் எங்கள் ஊரின் மக்கள் எங்கள் ஊரிற்கு வந்து இருப்பதற்கு பயப்படுகிறார்கள். இதனால் பாடசாலைக்கு பிள்ளைகள் பற்றாக்குறையாக இருக்கின்றது. இதனை காரணம் காட்டி பாடசாலை சரிவர இயங்குவதில்லை. ஆகையால் இங்கு இருக்கின்ற பிள்ளைகளின் கல்வி பாதிப்படைகிறது.

எங்களிடம் 66 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் இருக்கின்றன. அதை வைத்து எங்களின் காணிகளை இலகுவாக பெற்று தர முடியும். ஆனாலும் இவர்கள் எங்களது வயல் காணிகளை பெற்று தருகிறார்கள் இல்லை. இதனையே தீர்க்க முடியாத அரசாங்கம் பிறகு எப்படி நாட்டின் பிரச்சனையை தீர்க்கப் போகிறது? எங்களுக்கு எந்தவொரு பிரச்சனையும் தீராது. தீர விடவும் மாட்டார்கள்.

> **இடம்பெயர்ந்த எங்களது தமிழ் மக்களுக்குரிய வீட்டுத்திட்டத்தினை தான் சிங்களவர்களுக்கு கொடுத்து இங்கு குடியமர்த்தியிருக்கிறார்கள் வடக்கு கிழக்கில் இவ்வாறு தான் நடக்கிறது அதுவும் கிழக்கில் கடுமையாக இருக்கிறது**

இந்த நாட்டினை குழப்புவதே பிக்குகள் தான். யாழ்ப்பாணமோ, முல்லைத்தீவோ அல்லது தென் பகுதியோ எல்லா இடங்களிலும் நாட்டினை குழப்புவது இந்த பிக்குமார் தான். தென் பகுதியில் இருக்கின்ற காணிகளை எல்லாம் அப்படியே வைத்து கொண்டு வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை செய்வது தான் அவர்களுடைய திட்டமாக இருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். இங்கு குச்சவெளி பிரதேசத்திற்கோ, திரியாய் பிரதேசத்திற்கோ கிடைத்த தமிழ் மக்களுக்குரிய வீட்டுத்திட்டத்தை, தென் பகுதியில் இருந்த சிங்கள மக்களை இங்கு கொண்டு வந்து அவர்களுக்கு கொடுத்து இங்கு குடியமர்த்தியிருக்கிறார்கள். சிங்கள மக்கள் இங்கு முதலில் இருக்கவில்லையே, அவர்களுக்கு எப்படி வீட்டுத்திட்டம் கிடைக்கும்? இடம் பெயர்ந்த எங்களது தமிழ் மக்களுக்குரிய வீட்டுத் திட்டத்தினை தான் சிங்களவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். வடக்கு கிழக்கில் இவ்வாறு தான் நடக்கிறது. அதுவும் கிழக்கில் கடுமையாக இருக்கிறது.

காணி அனுமதிப்பத்திரம் உள்ள காணியை துப்பரவாக்கினால் கூட பிடித்து கொண்டு அடைக் கிறார்கள். ஆனால் பிரதான வீதியில் இருந்து 200 மீற்றர் தூரமே உடைய காணியை இயந்திரங்கள் உதவியுடன் பிக்கு துப்பரவு செய்கிறார். இரண்டு நாட்கள் அவ்விடத்திலே நின்றும் கூட வனவள திணைக்களத்தினரோ, பொலிஸோ எவரும் அவர்களை பிடிக்கவில்லை. கண்டும் காணாதது போல நடந்து கொள்கிறார்கள். இது எங்கள் கண்ணுக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கிறது. இதை நாங்கள் யாரிடம் முறையிடுவது? யாரிடம் கதைப்பது?

இன்னுமோரு கிராமவாசியாகிய பரமேஸ்வரன் கூறுகையில், திருகோணமலையில் ஒரு எல்லைப் பகுதியான கிராமம் தான் தென்னவன் மரவடி கிராமம். இங்கு எங்களுடைய மக்களின் வரவு போதாமையால் நாங்கள் பின்தங்கி சென்று கொண்டிருக்கிறோம். இந்த அரிசிமலை பிக்கு அனுமதிப்பத்திரம் உள்ள எங்களுக்குரிய காணிகளை பிடித்து கொண்டிருக்கிறார். நாங்கள் கோடாரியுடன் விறகு கொத்துவதற்கு போனால் கூட எங்களை வனவள திணைக்களத்தினர் பிடிக்கிறார்கள். அதேவேளையில் இந்த பிக்குவிற்கு இவ்வளவு காணியை துப்பரவு செய்து எடுப்பதற்கு எப்படி அனுமதி கொடுத்திருப்பார்கள்? அதை யாரும் பெரிதுபடுத்தவில்லை.

எங்களுக்கு அயலில் உள்ள சிங்கபுர கிராமத்திற்கும் எங்களது கிராமத்திற்கும் இடையில் இந்த பிக்கு வேலியை அமைத்தார் என்றால் யானைகள் எல்லாம் அவர்களது கிராமத்திற்கு போகும் அல்லது எங்களுடைய கிராமத்திற்கு வரும். இதனூடாக இரு கிராமங்களுக்கு இடையில் இனவாதத்தை தூண்டி விடுவது தான் இந்த பிக்கு செய்யும் வேலை. யானையை நாங்கள் கலைத்தால் அது அவர்களது கிராமத்திற்குள் போகும் அல்லது அவர்கள் கலைத்தால் எங்களது கிராமத்திற்குள் வரும். சிங்களவர்கள் எங்களது காணிகளை பிடித்து கொண்டிருக்கின்ற போதும் கூட நாங்கள் அவர்களுடன் ஒற்றுமையாக தான் போய்க்கொண்டு இருக்கிறோம். அவர்களுடன் பிரச்சனைகள் தொடர்பாக கதைக்க கூடிய ஒரு நிலையில் இருக்கிறோம். இப்படி இருக்கும் போது இந்த அரிசிமலை பிக்குவின் செயலானது எங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனையை உருவாக்க கூடிய நிலைமையை தான் தோற்றுவிக்கிறது. அதை தடுத்து நிறுத்துவதற்கு தான் நாங்களும் சிங்கபுர மக்களும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இதற்கு சிங்கள மக்களால் கூடியளவு எதிர்ப்பு காட்டப்பட்டு கொண்டு தான் இருக்கிறது. எங்களுக்கு இந்த இடத்தில் பன்சலை தேவையில்லை. பக்கத்தில் ஒரு பன்சலை இருக்கிறது அப்படி இருக்கையில் எதற்காக இன்னுமொன்று என்று அவர்கள் கேட்டு கொண்டு இருக்கிறார்கள். ஆர்ப்பாட்டம் செய்வதாக இருந்தால் எங்களுடன் சேர்ந்து செய்வது என்று தான் இருக்கிறார்கள். சில காலத்திற்கு முதல் அந்த இடத்தில் பிக்கு எல்லைக்கட்டை போட்டிருக்கிறார். அதனை சிங்கள மக்கள் பிடுங்கி எறிந்து இருக்கிறார்கள். இதனால் போடப்பட்ட வழக்கின் காரணமாக ஒரு மாத காலமாக அவர்களை சிறையில் வைத்திருந்தார்கள். இப்போதும் இரு இன மக்களின் எதிர்ப்பினால் தான் அரிசிமலை பிக்குவினுடைய செயற்பாட்டை தடுத்து நிறுத்தி இருக்கிறோம்.

# ஆக்கிரமிக்கும் அரிசிமலை பிக்கு பறிபோகும் தென்னவன் மரவடி கிராமம்



தொகுப்பு - பரத்

மிகவும் தொன்மையான தென்னவன் மரபு வழி வந்த மக்கள் வாழ்ந்த கிராமமே தென்னவன் மரவடி கிராமம். இது திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட கிராமமாகும். இந்த கிராமம் வடக்கு கிழக்கை பொறுத்தவரையிலும் திருகோணமலையை பொறுத்தவரையிலும் மிக முக்கியமானதாகும். இன வன்முறையின் காரணமாக முதலில் இடம்பெயர்ந்த கிராமம் தென்னவன் மரவடி என்றும் அறிய முடிகிறது. முன்னர் தென்னவன் மரவடி, கொல்லைவெளி, துவாரமுறிப்பு என்று மூன்று குளங்கள் அடங்கப் பெற்ற கிராமத்தில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பு இருந்ததாகவும் சுமார் 450 குடும்பங்கள் வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

பிரச்சனை காரணமாக இடம்பெயர்ந்து பின்னர் மீள குடியமர்த்தப்பட்ட போதிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத காரணத்தினாலும், தமக்குரிய வயல், காணிகள், பூர்வீக நிலங்கள் கிடைக்கப் பெறாமையாலும் அங்கிருந்த பெரும்பாலான மக்கள் வெளியேறி வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் தற்போது குறைந்தளவிலான குடும்பங்களே இருக்கின்றன. தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய இக்கிராமத்தில், கந்தசுவாமி மலை என்ற ஓரிடம் உள்ளது. புவியியல் அமைப்பின்படியும், நிர்வாக அமைப்பின்படியும், வடமாகாணத்தின் இறுதிக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாயையும், கிழக்கு மாகாணத்தின் முதற் கிராமமான தென்னவன் மரவடியையும் இந்த மலை பிரித்திருக்கிறது. இன்றைய தென்னவன் மரவடிக் கிராம மக்களில் ஒரு தொகுதியினர், இந்த மலைச் சூழலிலேயே வாழ்ந்திருக்கின்றனர். அங்கு, பூர்வீகமாக காணி உறுதி பெற்று வாழ்ந்தமைக்குக் கூட அவர்களிடம் ஆதாரங்கள் இருக்கின்றன.

முன்னர் இந்த மலையின் உச்சியில், முருகன் ஆலயமொன்று இருந்திருக்கிறது. ஆனால், தற்போது அந்த ஆலயம் இல்லை. இடம்பெயர்ந்த போது ஆலயம் இருந்ததாகவும் பின்னர் மீள வந்த பொழுது எல்லாம் அழித்தொழிக்கப்பட்டு சிதைவடைந்து இருந்ததாகவும் இக்கிராம மக்கள் கூறுகின்றனர். தாங்கள் மீண்டும் சிலை, வேல் என்பன வைத்த போது அவையும் காணாமல் போனதாகவும் கூறுகின்றனர். அதன் பின்பு இந்த பகுதி தொல்லியல் திணைக்களத்திற்கு உரியது என்று தங்களை உள்ளே அனுமதிப்பதில்லை என்று கூறுகின்றனர். எனினும் தாங்கள் மறைமுகமாக மலையில் கொண்டு

(21ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.08.2023 அன்று வெளியிடப்பட்டது.